www.tamilarangam.net

மரபு

MARAPU

அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் சமூக, இலக்கிய சஞ்சிகை

நீ சொல்லுகின்ற
கருத்தை நான்
முற்றிலுமாக மறுக்கிறேன்.
ஆனால்
அதைச் சொல்லுவதற்கு
உனக்கு பூரண
உரிமையுண்டு என்பதை
நிரூபணம் செய்ய
நான் மரணத்தைத்
தழுவவும் தயார்!

– வோல்தேயர்

19

06 '94

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

HINDUSTAN IMPORTS

INTRODUCING
EXTRA SUPER QUALITY
JASMINE FRAGRANT RICE

GOLDEN GRAIN
BRAND



GRADE: AAAA

Now available in
5Kg, 10Kg & 25Kg pack

48 - 50 Dingley Avenue,
Dandenong, Vic 3175.
Tel: (03) 794 6640

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படைப்புகளில்
வரும் கருத்துக்கள்
படைப்பாளிக்கே சொந்தம்.
கருத்துச் சுதந்திரத்தைக்
கௌரவிக்கும் வகையில் மரபிற்கு
உடன்பாடற்ற கருத்துக்களும் அதில் இடம்பெறும்.
மரபு சந்தாவைப் புதுப்பிக்க மறந்துவிட்ட வாசகர்கள் உடனடியாக
சந்தாப் பணத்தை அனுப்பி வைக்கவும். சந்தா செலுத்தாதவர்களுக்கு
அடுத்த மரபு இதழ் அனுப்பப்பட மாட்டாது.

இந்த மரபில். . .

சபாலிங்கம் மறைவு ரிஷ்யசிருங்கர்
சுதந்திரம் அசன்
சந்திப்பு: ப்ரீக்ஷா ஜோதி முருகபூபதி
ஐ. நா. வும் பெண்களும் நளினி காசிநாதன்
இறைவன் தோட்டம் வைத்தீஸ்வரன்
பேராசிரியர் துரைராசா மு.குணசிங்கம்
அடைப்பட முகங்கள்
இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

ஆசிரியர்
விமல் அரவிந்தன்

சந்தா
அவுஸ்திரேலியா $12
இலங்கை, இந்தியா $10
ஏனைய நாடுகள் $30

தொடர்புகளுக்கு
ABIRAME PUBLICATIONS
P.O.BOX 232,
WANTIRNA SOUTH, VIC 3152
AUSTRALIA

அச்சமைப்பு, அச்சுப்பதிப்பு
அபிராமி வெளியீடுகள்

விலை
2 வெள்ளிகள்

வாசகர்களிடமிருந்து காத்திரமான ஆக்கங்களை மரபு வரவேற்கிறது.
அத்துடன் உங்கள் மனதில் எழும் எண்ணங்களை
ஏனைய வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
எழுதுவனயாவும் சுருக்கமாக அமைதல்
விரும்பத்தக்கது.
புனைபெயர்களைப் பாவிக்க
விரும்புவோர், உங்கள்
ஆக்கத்துடன் சொந்த
விபரங்களையும்
அனுப்பவும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரபு

சுவடி 4 ஏடு 2

ஆனி 1994

நீங்களே தலைப்பிடுங்கள்!

சுயமாகச் சிந்திப்பதும், தனது சிந்தனைகளை மற்றவர்களுடன் பகிர்வதும் ஒரு மனிதனின் அடிப்படை உரிமை. மனித கலாசாரத்தின் முக்கிய பண்புகளில் ஒன்று. மனித நாகரீக வளர்ச்சியின் அடையாளமும் எனலாம். ஒரு மனிதனுக்கு இந்த உரிமை எந்தளவு உண்டு என்று தீர்மானிக்க இன்னொரு மனிதனுக்கு உரிமை இல்லை. இன, மொழி, கலாசார எல்லைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. இந்த அடிப்படையிலேயே மனிதர்கள் ஒரு சமூகமாகவோ அல்லது ஒரு இனமாகவோ ஒன்றி வாழ்கின்றனர்.

இந்தச் சமநிலையில் கோளாறு ஏற்படின் அது ஒரு சமூகமாயினும் சரி, ஒரு இனமாயினும் சரி, தொடர்ந்து இயங்க முடியாது. இயங்க வேண்டுமாயின் இந்த சமநிலை எதிர்ப்புக் காரணிகள் சமூகத்திலில் இருந்து ஒதுக்கப்பட வேண்டும். இது நியதி.

XXX

மே மாதம் முதலாம் திகதி, சபாரட்ணம் சபாலிங்கம் என்ற மனிதனின் சுதந்திரம், உதிரிகளாக அலையும் சில சமூக எதிர்ப்பு வாதிகளினால் பறிக்கப்பட்டுவிட்டது. கருத்துக்களை மாற்றுக்

www.tamilarangam.net

கருத்துக்களால் சந்திக்க முடியாத மனிதர்களின் துப்பாக்கியிலிருந்து வெளிவந்த இரண்டு ரவைகள், சபாலிங்கத்தின் கருத்துச் சுதந்திரத்தை மட்டுமல்ல, அவரது வாழ்வுரிமையையும் பலியெடுத்துள்ளன.

இலங்கையில் வலுவூன்றிவரும் துப்பாக்கிக் கலாசாரத்தில் வாழமுடியாது ஐரோப்பாவுக்குத் தப்பி ஓடிய இரு தமிழர்களினால் இந்தப் பழிவாங்கல் நிகழ்த்தப்பட்டுள்ளது. சமவலுவுள்ளவர்களுடன் மோத முடியாது கோழையாகிவிட்ட இவ்விருவரும், இன்று தமது துப்பாக்கிகளைப் பேனாக்களுக்கு எதிராகத் திருப்பியுள்ளனர். இங்கும் அவர்களுக்கு ஓர் ஆச்சரியமான பாடம் காத்துக் கிடக்கின்றது!

XXX

1981, மே 21ம் திகதி இலங்கை வரலாற்றில் மறக்க முடியாத நாள். தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிடப்பட்ட இன ஒழிப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக, யாழ் பொது நூல் நிலையம் சிறிலங்கா அரசின் பயங்கரவாதிகளினால் தீக்கிரையாக்கப்பட்டது. உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் அதிர்ச்சி அலைகளைப் பரப்பிய சம்பவம் இது. இன்றும் அன்றைய சுவாலைகள் மனக்கண்ணில் எழுகின்றன.

இந்த ரணங்கள் மாறாத நிலையில் எமக்கு இன்னுமோர் அதிர்ச்சி. கனடாவில், டொரன்ரோ நகரில் 1989ம் ஆண்டு முதல் இயங்கிவந்த 'தேடகம்' நூல் நிலையம் காடையர்களினால் தீக்கிரையாக்கப் பட்டுள்ளது. நமது வரலாற்றுக் குறிப்பில் 1994 மே 24ம் திகதியும் சேர்க்கப்பட்டுள்ளது.

XXX

சமீப கால நிகழ்வுகள் என்ன சொல்கின்றன?
நாம் இதையிட்டு என்ன செய்யப் போகின்றோம்?

□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□

www.tamilarangam.net

மன்டேலா:

ஒரு தலைவனின் இலக்கணம்!

அண்மைக் காலத்தில் உலக வரலாறு கண்ட இரண்டு மாபெரும் நிகழ்வுகள் தென்னாபிரிக்காவின் ஜனநாயக எழுச்சியும் பாலஸ்தீன மலர்ச்சியும் எனலாம். தீருமெனக் கனவிலும் கருதியிராத இரு பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்பட்டுள்ளன. இதன் பின்னணியில் இருந்தவர்களில் முக்கியமான இரண்டு மனிதர்கள்: தென்னாபிரிக்காவில் மன்டேலா, பாலஸ்தீனத்தில் அரபாத். இவர்களில் நெல்சன் மன்டேலா மீது எங்கள் பார்வையைச் செலுத்துவோம்.

ஒரு தேசத்தையோ அல்லது இனத்தையோ சுபீட்சத்துக்கு இட்டுச் செல்லக்கூடிய ஒரு தலைவருக்குத் தேவையான தராதரங்களும், குணவியல்புகளும் ஒருங்கே சேரப் பெற்றவர் மன்டேலா. இலட்சியத்தில் பற்று மிக்கவர். 27 வருடங்கள் சிறைக்குள் தள்ளப்பட்டும், தனது மக்களின் விடுதலையை நோக்கிய வேட்கை சற்றும் குறையவில்லை. இத்தகைய மன உறுதியும் துணிவும் இருந்த போதிலும், எதிர்க் கருத்துக்களையும் மதிப்பவர். நியாயத்தின் மீது நம்பிக்கை கொண்டவர். அரசியல் எதிராளிகளைத் திட்டமிட்டுக் கொன்றதாக அவரது மனைவி வின்னி மன்டேலா மீது நீதிமன்றம் குற்றம் கண்டபோது, தனது பேரன்புக்குப் பாத்திரமான மனைவியையே விவாகரத்துச் செய்தார்.

"நான் தேசிய செயற்குழுக் கூட்டத்துக்கு ஒரு குறிப்பிட்ட தீர்மானத்துடன் வருவேன். அதை அவர்கள் சிலநேரம் நிராகரித்து விடுவார்கள். நான் அவர்களுக்குக் கீழ்ப்படிவேன் – அவர்கள் பிழையாக இருப்பினும் கூட. இதுதானே ஜனநாயகம்" என்று குறிப்பிட்டார் மன்டேலா. ஒற்றுமையும் சமரசமும் அவருக்கு முதன்மையானவை. இதனால் அவர் *எல்லாராலும்* நேசிக்கப்படும் தலைவராகத் திகழ்கிறார்.

75 வயதான நெல்சன் மன்டேலா, தென்னாபிரிக்காவின் ஒரு பின்தங்கிய கிராமத்தில் பிறந்தவர். சிறுவனாக இருந்தபோது மாடு மேய்த்தவர். இன்று தென்னாபிரிக்க மக்களின் மனங்களை வெல்லும் மந்திர சக்தி படைத்த தலைவன். அவருடைய முகச் சுருக்குகள் எத்தனையோ கதைகளை எமக்குச் சொல்கின்றன. பழுத்த

www.tamilarangam.net

அரசியல் சாணக்கியத்தைப் பறைசாற்றுகின்றன.

மனடேலா வெறும் உணர்ச்சி கக்கும் ஒழு அரசியல் வாதியல்ல. கசப்பானாலும் உண்மை எதுவோ அதை மக்களுக்குச் சொல்பவர்.

பழிக்குப் பழி வாங்குவது அவரது அரசியலல்ல. மக்களை நேசிப்பதையும், மனிதத்துவத்தை நேசிப்பதையும் வாழ்க்கையாக்கியவர். இதனால் தான் மிலேச்சத்தனமான தென்னாபிரிக்க அரசுடனும் அவரால் பேச முடிந்தது. பேசி ஒரு தீர்வினை வெல்லவும் முடிந்தது.

தென்னாபிரிக்க வெள்ளையர் நிறவாத அரசு கறுப்பர்களான பெரும்பான்மையினருக்கு – அந்த மண்ணின் சொந்தக்காரர்களுக்கு – இழைத்த அநியாயம் சொல்லி முடியாது. நிறத்தின் பெயராலான ஒதுக்கல் சட்டங்களை இயற்றி, கறுப்பர்களை மிருகங்களிலும் கேவலமாக நடாத்தியது. கறுப்பர்களையும கறுப்பர்களையும் மோத விட்டு, ஆயிரக் கணக்கில் கொன்று குவித்தது. அவர்களின் பொருளாதாரத்தையும், அன்றாட வாழ்க்கையையும் சீர் குலைத்தது. மிக அடிப்படையான மனித உரிமைகளையே மறுத்தது. மன்னிக்க முடியாத இந்த வெள்ளை அரசுடன் கூட, கூடிப் பேசி, சமரசம் கண்டு, இன்று கறுப்பர்களுக்கு மட்டுமல்ல, வெள்ளையர்களுக்கும் தலைவனாகத் திகழ்கிறார் நெல்சன் மன்டேலா.

எந்த இராணுவம் அவரைத் தொடர்ந்து தொடர்ந்து சென்று சொல்லொணாத் துன்பங்களைத் தந்ததோ, எந்த இராணுவம் அவரைச் சிறைக்குள் அடைத்து வைத்துக் கண்ணும் கருத்துமாகக் காவல் இருந்ததோ, இந்த இராணுவம் இன்று அவரது கட்டளைக்காகக் காத்து நிற்கிறது. ஜனாதிபதி மன்டேலாவைப் பாதுகாக்கும் பொறுப்பினைச் சிரமேற் கொன்டிருக்கிறது.

இந்த வெற்றி மன்டேலா என்ற போர் வீரனுடையது அல்ல. மன்டேலா என்ற மனிதனுடையது என்பதிலும் ஐயம் உண்டோ?

– அவதானி

~~~~~~~~~~~~~~~~~~~~~~

சில சிறுசஞ்சிகைகள்:

ஓசை
C.L.A.L.P, B.P: 701,
75425 Paris Cedex
France.

சஞ்சீவி
Danmarksgade 10,
7500 Holstebro,
Denmark.

அ ஆ இ
Post Bus 85326
3508 AH Utrecht
Nederland.

சுவடுகள்
Herslebs Gt 43,
0578 Oslo,
Norway.
~~~~~~~~~~~~~~~~~~~~~~

www.tamilarangam.net

'ஆசியா' சபாலிங்கம் மறைவு.

— ரிஷ்யசிருங்கர்

புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் மத்தியிலும் 'துப்பாக்கிக் கலாசாரம்' ஊடுருவுகிறதோ என்ற ஐயப்பாடு சமீப காலங்களில் எழுந்திருக்கின்றது.

குறிப்பாக கனடாவிலும், ஐரொப்பிய நாடுகளிலும் வாழ வந்த இடத்தில், கருத்துகளுக்கு மாற்றுக் கருத்தை முன்வைக்க முடியாமல் அல்லது தெரியாமல், வன்முறைகளின் மூலம் பழிதீர்த்துக் கொள்ளும் அபாயம் தோன்றியிருப்பதானது, நம்மவர் மத்தியில் எதிர்காலம் தொடர்பாக ஆழ்ந்த கவலைதோய்ந்த சிந்தனைகளை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில், பிரான்ஸில் 'ஆசியா' பதிப்பகத்தின் ஸ்தாபகர் அவரது வீட்டிலேயே இரண்டு 'மர்ம' தமிழ் இளைஞர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி அதிர்ச்சியானது.

'ஆசியா' பதிப்பகம் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர்

பிரான்ஸில் தோன்றியது. இதன் ஸ்தாபகர் சபாரத்தினம் சபாலிங்கம் பிரான்ஸிலும், தமிழர் தஞ்சம் புகுந்த நாடுகளிலும், இலங்கையிலும் நன்கு அறியப்பட்டவர்.

இவரது பிரான்ஸ் வீட்டினுள் — அவரிடம் உதவி பெற வந்தவர்களாகத் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு வந்த இருவர், அவரது அன்பான அழைப்பை ஏற்றுக் கொண்டே அவரைச் சுட்டுக் கொலை செய்து விட்டுத் தப்பித்துச் சென்றுள்ளனர்.

வழக்கம் போன்று இக் கொலையையும் 'இனம் தெரியாதவர்களே' செய்தார்கள் என்று தமிழர் வரலாற்றில் பதிவு செய்யப்படலாம். இலகுவாக எதனையும் மறந்துவிடும் இயல்பு கொண்ட தமிழ் சமுதாயமும் இச் சம்பவத்தை மறந்து விடலாம்.

www.tamilarangam.net

இந்த 'ஞாபகமறதி'களே – இந்த வன்முறையாளர்களுக்குச் சாதகமான சாதனம்.

சபாலிங்கம், யாழ். குடாநாட்டில் 1952இல் தீவுப் பகுதியில் பிறந்தவர். யாழ். இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்புகளை முடித்துக் கொண்டு – கட்டுப்பத்தை தொழில் நுட்பக் கல்லூரியில் டிப்ளோமா பெற்றவர்.

தேசிய இனப் பிரச்சினை கூர்மையடைந்து இனவிடுதலைப் போராட்டம் வெடிக்கும் முன்னரே 'தமிழ் மாணவர் பேரவையை' உருவாக்கி – தரப்படுத்தலினால் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகப் போராடியவர். பல மாணவர் போராட்டங்களில் முன்னணி தளபதியாக விளங்கியவர்.

இதனால் பின்னாளில் இவருக்கும் சில இயக்கங்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகளும் இருந்தன.

இலங்கையின் அடக்குமுறை அரசின் பார்வையில் 'சந்தேக நபராக'க் கருதப்பட்டு, கைதாகி சிறைவாசமும் அனுபவித்தவர்.

ஒரு சந்தர்ப்பத்தில் சிறையிலிருந்து தப்பியோடி மக்களது நலன்களுக்காகச் சேவையாற்றவும் முயற்சித்தார். எனினும் – மீண்டும் கைதாகி பல துன்கங்களையும் சித்திரவதைகளையும் எதிர்நோக்கினார்.

1981இல் பிரான்ஸில் தஞ்சம் புகுந்தபோதிலும் – அவரது மக்கள் மீதான சேவை மனப்பான்மை அவரை விட்டுவைக்கவில்லை.

மனிதாபிமானம் மிக்க, ஆளுமையும் ஆற்றலும் கொண்ட மனிதன், தான் எங்கு வாழ நேரிட்டாலும் தனது பணிகளை நிறுத்தமாட்டான் என்பதற்கு எமக்கெல்லாம் இந்த சபாலிங்கம் ஒரு முன்னுதாரணம்.

பிரான்ஸில் அகதிகளாகத் தஞ்சம் புகந்த பலர், சபாலிங்கத்தின் தயவில் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர். மொழி பெயர்ப்பு ஆற்றலும் 'சபா'விடம் நிரம்பப் பெற்றிருந்தமையால் அவரால் பல 'அகதி'களுக்கு ஆக்கபூர்வமாக உதவ முடிந்தது.

கலை, இலக்கிய பரிச்சயமும், விஞ்ஞான அறிவும் கொண்டிருந்த சபாலிங்கம் 'ஈழ கலை சமூக விஞ்ஞானக் கழகம் (Arts Social Science of Eelam Accademy - ASSEAY) என்ற அமைப்பைத் தோற்றுவித்துப் பல நூல்களை அழகுற பதிப்பித்து வெளியிட்டார்.

இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளின்றி பரந்த மனப்பான்மையுடன் சர்வதேச வாதியாக அவர் மிளிர்ந்தமையால் – தராக்கி, சோலைக்கிளி, சாஜஹான் உட்பட இன்னும் சில தமிழ் எழுத்தாளர்களினதும் நூல்கள் மேற்படி ASSEAYவின் சார்பாக வெளிவந்தன.

மக்களின் அடிப்படை மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த ஒரு அறிவுவாதி – இந்தப் பெருமைகளையெல்லாம் உணராதவர்களினால் – நிரந்தரமாகக் கண்களை மூடிக்கொண்டார்.

□□□□□

www.tamilarangam.net

சுதந்திரம்!

எங்கும் சுதந்திரம் எதிலும் சுதந்திரம்
தங்கு தடையில்லா தறிகெட்ட சுதந்திரம்

பேசலாம் எதையும் பெரிய குரலில்
உரத்துக் கத்தலாம் உரிமை உண்டு
அடுத்தவருக்குக் கேட்காமல் நீ
எதையும் பேசு தடுக்க மாட்டோம்.
எங்கள் கையில் துவக்கு உண்டு
அதனை நினைவில் கொண்டால் நன்று

புத்தகமாக உனது கருத்தை
பதித்துக் கொள்ள உரிமை உண்டு
பத்திரிக் கை சுதந்திரங்கள்
பக்குவமாய் பேணுவோம் நாம்
எதையும் நீங்கள் எழுதிக் கொள்ளலாம்
எழுத்து மட்டும் தெரியக் கூடாது.
எங்கள் கையில் துவக்கு உண்டு
அதனை நினைவில் கொண்டால் நன்று

கலைகள் இலக்கியம் காவியம் என்று
எதையும் செய்ய தடையே இல்லை
தலையுள் உள்ள தத்துவம் எல்லாம்
அதனுள் புகுத்த அனுமதி உண்டு
எமக்கு எதிராய் இருந்தாற் கூட
அதற்கு உரிமை உனக்கு உண்டு
ஆரும் பாரா வண்ணமாக
ஆய கலைகள் படைக்கலாம் நீ
இங்கும் நீ ஒன்றைக் கவனி
எங்கள் கையில் துவக்கு உண்டு

கண்டதும் கற்றவன் பண்டிதம் ஆவான்
என்பதால் நீ எதையும் படிக்கலாம்
தடைகள் எதுவும் போட மாட்டோம்
எனினும் ஒன்றை நன்றாய் கவனி
எங்கள் கையில் துவக்கு உண்டு
உனது கையில் துவக்கு இல்லை

– அசன் –

www.tamilarangam.net

நூல் அறிமுகம் (1)

கவிதை (சஞ்சிகை)

ஆசிரியர் : அ. யேசுராசா
வெளியீடு : கவிதை, இல.1, ஓடைக்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்திலும் அச்சுப் பதிப்பு நடக்கிறதென்பது, வெளிநாடுகளில் வாழும் பலருக்கு நம்ப முடியாத செய்தியாக இருக்கும். யாழ்ப்பாணத்தில் அச்சாகி அவுஸ்திரேலியா வரை வந்து சேர்ந்திருக்கும் 28 பக்கக் கவிதைச் சஞ்சிகைதான் 'கவிதை'. (யாழ்ப்பணத்திலிருந்து டொமினிக் ஜீவாவின் 'மல்லிகை' இதழும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.)

'கவிதை', இளங் கவிஞர்களுக்கான சஞ்சிகை. இதன் ஆசிரியரான அ. யேசுராசா முன்னர் தரமாக வெளிவந்து கொண்டிருந்த 'அலை' சஞ்சிகையை நடாத்தியவர். கலை, இலக்கியக் கோட்பாட்டு ரீதியிலான சர்ச்சைகளில் தீவிரமாக ஈடுபட்டதோடு, பலருக்கு சர்ச்சைக்குரியவராகவும் இருந்து வருபவர். இவரை ஆசிரியராகக் கொண்ட ஒரு பத்திரிகையில் கனதியை எதிர்பார்ப்பது இயல்பு.

கவிதை சஞ்சிகையில் பின்பக்கங்களில் இருக்கும் கனதி முன் பக்கங்களில் இல்லை. அதாவது, இளங் கவிஞர்களின் படைப்புகளில் கவித்துவத்திலும் பார்க்க, பெரும்பாலும் ஒரு இயந்திரமயமான போக்கைக் காணக்கூடியதாக இருக்கிறது. முன்பக்கத்தில் ஆசிரியர் குறிப்பிடும் 'கால நிர்ப்பந்தத்துக்கியைந்த தேசிய விடுதலைப் போராட்டம் சார்ந்த ஆக்கங்கள்' இவை தானென்றால், இவை கருத்திலும் கவித்துவத்திலும் ஈழத்து இளங் கவிஞர்கள் அடைந்திருக்கும் பொதுவான பலவீன நிலையையே காட்டுகின்றன.

இது சஞ்சிகை ஆசிரியரின் பிழையல்ல. சட்டியில் உள்ளதுதானே அகப்பையில் வரும்? கவிஞர்களின் பலவீனமென்றுகூடச் சொல்லுதல் நியாயமற்றதாகலாம்? கருத்தின் மீதும் கவிதையின் மீதும் சூழலின் கெடுபிடி என்றும் சொல்லலாமா?

எவ்வாறாயினும், இப்படியொரு சஞ்சிகை யாழ்ப்பாண மக்களின் உயிர்ப்பைக் காட்டுவதால் மகிழ்வைத் தருகிறது.

~ ஆஸி வாசகன்.

www.tamilarangam.net

சந்திப்பு:~

"உள்ளடங்கிய வேதனையுடன் மனித உயிர்ப்புக்குக் கலை இலக்கியம் படைக்கும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள்"

'பரீக்ஷா' ஞாநி

முருகபூபதி

[பள்ளிப்பருவத்திலேயே நாடகமேடைப் பரிச்சயமும், கல்வியில் விஞ்ஞானத்திலும் இலக்கியத்திலும் பட்டமும், Indian Express, 'ஜூனியர் போஸ்ட்' முதலானவற்றிலும், 'தீம்தரிகிட', 'ஏழுநாட்கள்', 'அலைகள்' போன்ற சிற்றிதழ்களில் தனது எழுத்து வண்ணங்களைப் பதித்தும் பெற்ற அனுபவங்களினூடே, நவீன நாடக மரபுக்கு வலுவும் சேர்த்துள்ள 'பரீக்ஷா' ஞாநி, நாடகப் பேராசிரியர் எஸ். ராமானுஜம், அமரர் டாக்டர் ஜி. சங்கரப்பிள்ளை முதலானோரிடம் நாடகம் பயின்றவர்.

'வீதி' – திறந்தவெளி நாடக இயக்கத்தின் ஸ்தாபக உறுப்பினர். 'பரீக்ஷா' நாடகக் குழுவின் முக்கிய தூண். ந. முத்துசாமி, இந்திரா பார்த்தசாரதி, அம்பை, பிரபஞ்சன், ஜெயந்தன் முதலான பலரின் படைப்புகளை மேடைக்குத் தந்தவர். பாதல்சர்க்கர், விஜெய் டெண்டுல்காரின் நாடகங்களைத் தமிழில் மேடையேற்றியவர். விண்ணிலிருந்து மண்ணுக்கு, கண்ணாடிக் கதைகள் முதலான சில தொலைக்காட்சி தொடர்களை வழங்கியவர்.

தற்போது திரைப்பட தணிக்கை சபை உறுப்பினராகவும், 'ரீ. வி. உலகம்' என்ற வார இதழின் ஆசிரியராகவும் ஞாநி பணியாற்றுகின்றார். அவுஸ்திரேலியாவுக்குச் சமீபத்தில் வருகை தந்தசமயம் மரபுக்கு அவர் வழங்கிய பேட்டி.]

? : தமிழ் நாட்டில் தமிழ் நாடகத் துறையின் வளர்ச்சி பற்றியும், 'நவீன நாடகங்களின்' அண்மைக்கால போக்குகள் தொடர்பாகவும் தங்கள் கருத்துக்கள்....

www.tamilarangam.net

! : சபா நாடக மரபு இன்று Commercial ஆகிவிட்டது. வெகுஜன நாடக மரபும் எஸ். வி. சகஸ்ரநாமம் போன்றவர்களின் மறைவோடு அறுந்து போயிற்று – வெறும் நகைச்சுவைப் பாங்காகக் குறுகிவிட்டது. இன்றைய தமிழ்ச் சினிமாவைப் போன்று மக்களை அது கவருகிறது. ஆனால், அதே வேளையில் வெளியில் 16 ஆண்டுகளாக நவீன நாடகம் வலுவடைந்து வருகின்றது. இது சிறுபான்மை தான். எனினும் புறக்கணிக்க இயலாதவாறு வளர்ச்சியடைந்துள்ளது. 1978இல் எங்கள் 'பரீக்ஷா' தொடங்கப்பட்ட பொழுது, சென்னையில் 'வீதி' கூத்துப் பட்டறை, மதுரையில் நிஜநாடக இயக்கம் ஆகிய குழுக்கள் மாத்திரம்தான் இருந்தன.

இன்று, சென்னையில் மட்டும் பரீக்ஷா கூத்துப்பட்டறையுடன் ஐக்கியா, யவானிக்கா, ஆடகளம், பூமிகா, பல்கலை அரங்கம், சென்னை கலைக்குழு, முத்ரா என்று பல குழுக்கள் செயற்படுகின்றன. தமிழ் நாடு முழுவதும் – தஞ்சை, பாண்டிச்சேரி, மதுரை என்று பல இடங்களிலும் பத்துப் பதினைந்து நாடகக் குழுக்கள் பெருகியுள்ளன. வளர்ந்துள்ளன. முன்பைவிட இப்பொழுது, நிறையப் பெண்கள் நவீன நாடக முயற்சிகளில் பங்கேற்கிறார்கள். கூத்துப்பட்டறை கடந்த 10 ஆண்டுகளில் ஒரு முழுநேர நாடகக் குழுவாகவே வளர்ச்சியடைந்துள்ளது. இவையாவும் முக்கியமான வளர்ச்சிகள் தானே...

? : நவீன நாடகங்களைப் பொறுத்தவரையில் நிறைய நாடகங்கள், பார்வையாளர்களுக்கும் – ஏன் அவற்றில் நடிப்பவர்களுக்கும் கூட புரியாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தப் 'புரிந்து' கொள்ளும் தன்மை குறித்து தங்களின் கணிப்பு என்ன? மொழிபெயர்ப்பு நாடகங்களைப் பற்றியும்தான்...

! : இந்தக் குற்றச்சாட்டை வைப்பவர்களில் நானும் ஒருவன்தான். 'புரிந்து கொள்ளுதல்', 'புரிந்து கொள்ளாமை' என்ற பிரச்சினை எழுவதற்கு அடிப்படைக் காரணம், ஒவ்வொரு குழுவும் தங்கள் பார்வையாளர்கள் யார் என்பதைத் தெளிவாக வரையறுத்துக் கொள்ளாமல் இயங்குவதுதான் என்று கருதுகிறேன். பரீக்ஷா தொடங்கப்பட்ட காலத்திலேயே இதனைத் தெளிவாக வரையறுத்து விட்டோம். எங்கள் நாடகங்களை ஒரு பார்வையாளர்கூட 'புரிந்து கொள்ளவில்லை' என்று கூறவில்லை.

நாடகம் அசலாகத் தமிழில் எழுதப்பட்டாலும் மொழிபெயர்க்கப்பட்டாலும் – எந்தப் பர்வையாளர்களுக்காக நிகழ்த்தப்படுகிறது என்ற தெளிவு இருக்குமானால் அதில் 'புரிதல்' பிரச்சினை எழுவதற்கு வாய்ப்புக் கிடையாது. பரீக்ஷா பிறமொழி நாடகங்களை நிறையவே செய்திருக்கிறது. எங்கள் பார்வையாளர்களின் வாழ்க்கைக்கு 'பொருத்தப்பாடு' உள்ளவற்றை மாத்திரமே தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம்.

? : தங்களது நாடகங்கள் தொடர்பாக எழும் விமர்சனங்களை எவ்விதம் உள்வாங்கிக் கொள்கிறீர்கள்...

www.tamilarangam.net

! : விமர்சனங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

* நாடகத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களிடமிருந்து எழக்கூடியவை...
* அவ்வப்போது வெகுஜனப் பத்திரிகைகளிலோ, சிற்றிதழ்களிலோ எழுதப்படுபவை...
* பார்வையாளர்களிடமிருந்து கிடைக்கின்ற பிரதிபலிப்புகள்...

முதலிரண்டையும் நாம் புறக்கணிப்பது இல்லையென்றாலும், மூன்றாவதைப் பற்றி மாத்திரமே – அதாவது பார்வையாளர்களின் கருத்துக்களை மத்திரமே நான் கவனத்தில் கொள்கிறேன். எங்கள் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டதன் பின்பு எமது குழுவினர் பார்வையாளர்களுடன் கலந்துரையாடுகிறார்கள். நாடகம் நிகழ்த்தப்படும் பொழுது எமது குழுவினரும் பார்வையாளர்களுடன் ஒன்றாக அமர்ந்து அவர்களின் பிரதிபலிப்புகளை 'பதிவு' செய்கின்றனர். நாடகம் முடிந்ததும் பார்வையாளர்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காக அவர்களுக்கு ஒரு 'Form' விநியோகிக்கப்படுகிறது. பார்வையாளர்கள் அதனை தங்கள் அபிப்பிராயங்களினால் பூரணப்படுத்தித் தருகிறார்கள். நாம் அவற்றைப் பரிசீலனை செய்வதுடன் Document' ஆகவும் பாதுகாக்கின்றோம். இவ்விதம் பார்வையாளர்களின் விமர்சனங்களை Feedback ஆகப் பெற்றுக் கொள்கின்றோம்.

? : தங்களது நாடகப் பிரதிகளில் உள்ள 'முழுமை', நாடகம் மேடையேறும் போது வெளிப்படுவதில்லை என்று ஒரு கருத்து உள்ளதே... இந்த 'முழுமை' குறித்து என்ன கருதுகிறீர்கள்...

! : எந்த நாடகக் கலைஞனுக்கும் எந்த நிகழ்வும் தான் விரும்பிய 'முழுமை'யை எய்திவிட்ட உணர்வு கிட்டிவிடுவதில்லை. அதேசமயம், ஒவ்வொரு இயக்குனரின் கையிலும் ஒவ்வொரு நாடக ஆசிரியனின் பிரதி வெவ்வேறு விதமான முழுமைதான் பெறும். Absolutely என்று வரையறுக்க எதுவும் கிடையாது.

வசனங்களை மறந்து போவது, தவறான நுழைவு, நடிப்பில் பற்றாக்குறை, போன்ற அடிப்படைக் கோளாறுகள் இல்லாமல் நடக்கின்ற ஒவ்வொறு நாடக நிகழ்வும் அதனளவில் முழுமையானதுதான். நாடகப் பிரதிக்கு, இயக்குனரும் குழுவும் கொடுத்துள்ள வியாக்கியானம் பற்றி எப்பொழுதுமே, எந்தக் குழுவின் நிகழ்விலும் சர்ச்சைக்கு இடமிருந்து கொண்டேதான் இருக்கும். எனவே அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட Interpretation னை சரியாக வெளிப்படுத்தினார்களா என்பது மட்டுமே கவனிக்கத்தக்கது.

? : படிப்பதற்கு மட்டுமே தகுந்த நாடகங்களாகவும் ~ நடிப்பதற்கு மட்டுமே ஏற்றதாகவும் ~ படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமானதென்றும் ~ பிரதிகள்

www.tamilarangam.net

வகைப்படுத்தப்படுகின்றன. இந்த வகைப்படுத்தல் பற்றியும், தங்களின் நாடகப் பிரதிகள் எவ்வாறு அமைகின்றன என்பது தொடர்பாகவும் சொல்லுங்கள்.

! : படிப்பதற்கு மட்டுமான நாடகங்கள் என்ற வகைப்படுத்தலோடு எனக்கு அவ்வளவு ஈடுபாடு இல்லை. நாங்கள் நடிக்க முடியாத நாடகப் பிரதிகளை படிக்கின்ற போது காட்சிப் படுத்திப்பார்க்கின்ற விதத்திலேயே நான் பழகியிருக்கின்றேன். நாடகங்கள் அடிப்படையில் நடிக்கப்படுவதால் மட்டுமே முழுமையடைகின்றன.

? : சென்னையில் இயங்கும் 'கோலம்' மற்றும் இதர குழுக்களான யவானிகா, ஐக்கியா, ஆடகளம், பூமிகா (பெண்கள் அமைப்பு) முதலானவற்றின் பணிகளை பிறிதொரு குழுவின் அமைப்பாளராகவும், நாடகத் தயாரிப்பாளராகவும் எவ்விதம் அவதானிக்கின்றீர்கள்... உங்கள் கணிப்புகள்...

! : கோலம் தனி அமைப்பல்ல. பரீக்ஷாவும் ஏனைய குழுக்களும் வாரந்தோறும் ஓராண்டுகாலம் – நாடகங்கள் நிகழ்த்துவதற்கு உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு. அந்த முயற்சி நிறைவேறிவிட்டது. பொதுவாக பரீக்ஷாவின் பார்வையில், மேற்குறிப்பிட்ட குழுக்கள் நடுத்தர வகுப்புப் பார்வையாளர்களிடம் – அவர்களுக்கு எட்டும் விதத்தில் நல்ல படைப்புகளைச் சென்று சேர்ப்பதில் ஈடுபாடு காட்டுபவை என்பதனால் அவர்களுடன் இணைந்து செயல்படுவதில் ஆர்வம் காட்டுகின்றோம்.

? : எழுத்தாளர்களின் மத்தியில் 'குழு' மனப்பான்மையும் EGO குணாதிசயங்களும் பரவலாகியுள்ளன. நாடகத்துறை சார்ந்த கலைஞர்களும் இதற்கு விதிவிலக்கல்ல... இந்தப் போக்கு ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உகந்ததல்ல என்று கருதுகின்றோம். உங்கள் நிலைப்பாடு என்ன...

! : இதில் மாறுபட்ட கருத்துக்கே இடமில்லை. ஆனால், இப்படிப்பட்ட குழுமனப்பான்மை EGO இவற்றையெல்லாம் மீறித்தான் படைப்புலகில் பல நூற்றாண்டுகளாக மக்களுக்கான காரியங்கள் சாத்தியப்பட்டு இருக்கின்றன. எங்கள் வேலையில் எங்களுடைய முழுக் கவனத்தையும் சக்தியையும் செலுத்தினால் போதும். சர்ச்சைகளுக்குப் பதில் சொல்லித் திசை திரும்பத் தேவையில்லை என்ற மனோபாவத்தில் நான் கடந்த சில ஆண்டுகளாகப் பக்குவப்பட்டுவிட்டேன். இதன் விளைவாக, 'அச்சில்' ஒருதரப்புக் கருத்துக்களை மட்டுமே பெறநேர்ந்த சிலர் மனதில், எங்களுக்கு ஓரிழப்பு ஏற்பட்டுள்ள போதிலும், அதையும் காலப் போக்கில் எங்கள் நடவடிக்கைகள் சரிசெய்துவிடும் என்று நம்புகின்றேன்.

? : ஈழத்தில் தமிழ் கவிதை நாடகங்கள் பிரபல்யமானவை. இவைபற்றிய தங்களின் ஈடுபாடுகள்...

! : ஏனோ, தனிப்பட்ட முறையில் எனக்கு கவிதை நாடகங்களில் ஈர்ப்பு இல்லை. நாடகத்தில் கவிதையை ஈடுபடுத்துவது, எனக்குப் பிடித்தமானது. எனது

www.tamilarangam.net

'பலூான்' நாடகத்தில் (81ல் மேடையேற்றப்பட்டது) சுமார் பதினைந்து புதுக் கவிதையாளர்களின் புதுக்கவிதைகளை ஆங்காங்கே நாடக உரையாடல்களாகப் பயன்படுத்தி இருக்கின்றேன்.

ஈழத்து இலக்கியம் என்று – குறிப்பாக கவிதைகள் என்று – வரும்பொழுது சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், கௌரி ஆகியோரின் கவிதைகளும் பெண்கவிஞர்களின் 'சொல்லாத சேதிகள்' தொகுப்பில் உள்ள அனைத்து கவிதைகளும் எனக்குப் பிடித்தமானவை. ஈழ நாடக முயற்சிகளில் பாலேந்திராவின் நாடகங்கள் பற்றிய கேள்வி அறிவு மட்டுமே உண்டு. மௌனகுருவின் படைப்புக்களைப் படித்திருக்கின்றேன். இலங்கையின் தமிழ் கூத்து வடிவங்கள், பாடல்கள் இடம்பெற்ற இளைய பத்மநாதனின் சென்னை நகர படைப்புகள் மட்டுமே நான் நேரில் பார்க்கக் கிடைத்தவை. அவற்றின் ஆட்ட முறைகளும் இசைப்பாங்கும் எனக்குப் பிடித்தமானவை. அவற்றை நவீன முயற்சியில் பயன்படுத்தும் விதங்கள் பற்றிய புதிய தேடல்களை நாடுவது தொடர்ந்தும் எனக்கு ஆர்வமான விடயமே.

? : ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடொன்றிலிருந்து (அவுஸ்திரேலியா) பேட்டி தருகிறீர்கள். புலம்பெயர்ந்த எம்மவர்கள் பற்றிய உங்கள் அவதானம் எவ்வாறு அமைகிறது...

! : புலம்பெயர்ந்திருப்பது என்பதே விருப்பத்துக்கு மாறாக நடக்கும் போதெல்லாம் ஓர் அவலமான நிகழ்வுதான். இந்த அவலமான நிலை ஏற்படுத்துகிற ஆழமான வேதனையை உள்ளடக்கிக் கொண்டு தொடர்ந்தும் அயராமல் தங்களின் கலை, இலக்கிய நடவடிக்கை வாயிலாகத் தங்களை மனித உயிர்ப்போடு வைத்துக் கொண்டிருக்கிற ஈழத்தமிழர்களின் உற்சாகம் என்னால் மறக்க முடியாதது.

தங்களின் அடுத்த தலைமுறையினரான இன்றைய குழந்தைகள் நாளை தமிழை மறந்து விடுவார்களோ என்ற கவலையும் கொண்டிருக்கிறார்கள். இந்தியத் தமிழர்களுக்கும் இந்நிலைமை உண்டு. மேற்கத்தைய வாழ்வுமுறை, பணத்தை மட்டுமே 'ஆராதிக்கின்ற' கலாசாரம் என்பன, அவரவர் 'வேர்'களிலிருந்தே பிடுங்கி எறிந்துவிடக்கூடிய 'ஆபத்து' இருக்கிறது. நம் தமிழ்க் குழந்தைகளுக்குச் சொல்லித்தர நல்ல பல பாடல்கள், கதைகள், நாடகங்கள் தேவை. இந்திய இசை மேதை எம். பி. ஸ்ரீனிவாசன் குழந்தைகளுக்கான 'சேர்ந்திசை'யில் தொடங்கிய முயற்சியை ஈழத் தமிழர்களும் பின்பற்றலாம் எனத் தோன்றுகின்றது.

சரிநிகர் – மனித உரிமைகளுக்காகக் குரல் எழுப்பும் பத்திரிகை.
Sarinihar, 4 Jeyaratna Mawatte, Colombo 5, Sri Lanka.

www.tamilarangam.net

ஐக்கிய நாடுகள் சபையும் பெண்கள் உரிமையும்

- நளினி காசிநாதன்.

மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தில் பெண்கள் உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. உலக சனத்தொகையில் 50 வீதத்திற்கு மேல் பெண்களாக இருந்த போதிலும் இப்படிப்பட்ட ஒரு தவறு நிகழ்ந்ததில் வியப்பேதுமில்லை. ஏனெனில் சட்டங்களை அமைப்பதும் அமுல்ப்படுத்துவதும் ஆண்களே.

மனித உரிமைகள் மீறப்படாமல் இருப்பதற்குப் பொறுப்பாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை, பெண்களின் மனித உரிமைகளை ஓரளவு பாதுகாத்துள்ளது. 1946ம் ஆண்டு வியன்நாவில் பெண்களின் நிலை பற்றிய கமிஷன் ஒன்று நிறுவப்பட்டது. 1979ம் ஆண்டு பெண்களுக்கு எதிரான பாரபட்சங்கள் (Convention on the Elimination of All Forms of Discrimination Against Women) யாவற்றையும் ஒழிக்கும் திட்டம் ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவை இரண்டும் ஓரளவு பெண்களின் நிலைமையைப் பாதுகாத்த போதிலும், பெண்களை ஒரு தனியான உப வகுப்பாக கருதுவதின் மூலம் அவர்களின் நிலையை ஒரு ஓரத்திற்குக் கொண்டுபோய்க் குறைத்து விடுகின்றனர். பெண்உரிமை பிரதான மனித உரிமைக் கோரிக்கைகளில் இருந்து சற்றே தாழ்த்தித் தனிப்பட்ட விடயமாக ஆராயப்படுகிறது.

பெண்களைப் பற்றிய பாரபட்சத் திட்டத்தில் 80 நிபந்தனைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இனப் பாரபட்சத் திட்டத்தினால் (Racial Discrimination Convention) 4 நிபந்தனைகள் மாத்திரம் உள்ளன என்பதை நோக்கும்போது பெண்களைப் பற்றிய பாரபட்சத் திட்டத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. உ+ம்: எகிப்தில் பெண்களுக்கு எதிராக உள்ள எல்லா பாரபட்ச நடவடிக்கைகளும் ஒழிக்கப்படல் வேண்டும் என்ற பிரகடனம் அங்குள்ள இஸ்லாமிய ஷரியா விதிகளை அனுசரித்தே ஏற்றுக் கொள்ளப்படும் என்று நிபந்தனை விதிக்கப்பட் டுள்ளது.

மலாவிக் குடியரசில் இந்தத்திட்டத்தை உடனடியாகப் பின்பற்றத் தேவையில்லை என இன்னொரு நிபந்தனை கூறுகிறது. அதாவது சமயக் கோட்பாடுகள் பெண்களின் உரிமைகளை அடக்குவனவாக அமைந்த போதிலும் அவற்றை பின்பற்றத் தடையில்லை. (குறிப்பு: இஸ்லாமிய முறைப்படி பெண் உறுப்புகளைச் சிதைக்கும் மரபு ஆபிரிக்க நாடுகளில் இன்னும் பின்பற்றப்படுவதற்கு தடையில்லை.)

மனித உரிமைகளுக்குப் பொறுப்பான ஐக்கிய நாட்டுச் சபையின் அமைப்பிலோ, அதன்

www.tamilarangam.net

பிரகடனங்களிலோ பெண்களின் அனுபவங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆண்களிற்கும் பெண்களிற்கும் உண்மையில் சம அந்தஸ்து கொடுக்க விரும்பும் எந்த நிறுவனமும், பிரகடனமும் இரு இனத்திற்கும் இடையே அவர்களுடைய செயல்பாடுகளில், கடமைகளில், அதிகாரத்தில், அனுபவங்களில் அவற்றின் விளைவாய் ஏற்படும் தேவைகளில் அடிப்படை வேறுபாடு உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இது நடைபெறாத வரையில் பெண்களின் நிலைமையில் ஒருவகை மாற்றமும் ஏற்படா. முதற்படியாக எந்த நிறுவனத்திலும் பெண்களின் உண்மையான பங்களிப்பு இருக்கவேண்டும்.

சமூக நீதி நிறுவனமான ஐ.நா. சபையின் உயர் நிர்வாகப் பதவி களில் 5 வீதத்திற்கும் குறைவாகவே பெண்கள் உள்ளனர். பிரிவுகளுக்குப் பொறுப்பான 20 செயலாளர்களில் ஒரு பெண்ணும் இல்லை. உலக நிறுவனமான பிள்ளைகளுக்குப் பொறுப்பான UNICEF இல் கூட உயர்நிர்வாகப் பதவிகளில் 4 பெண்கள்தான் இருக்கிறார்கள். FAO இலும் இதே நிலைதான்.

சர்வதேச மனித உரிமை நிறுவ னங்கள் எல்லாவற்றிலும் இந் நிலையைத் தான் நாம் காண்கிறோம். முன்பு கூறியது போல பெண்களிற்கும் ஆண்களிற்கும் அவர்களுடைய வாழக்கை அனுபவங்களில் அடிப் படை வேறுபாடு இருப்பதால் இந் நிறுவனங்களிலெல்லாம் ஆண்களின் மேலாதிக்கம் தொடர்ந்தும் இருந்தால், பெண்களின் நிலையில் ஒருவித மாற்றமும் ஏற்படாது. பால் ரீதியான பாரபட்சம், வீட்டக வன்செயல் (Domestic violence) , அடித்தல், கற்பழித்தல் இவை எல்லாம் பெண் களிற்கு மாத்திரம் உள்ள பிரச்சினை கள். ஆகையால் அவர்களுடைய அனுபவங்கள் பொதுவான மனித உரிமை மீறல்களுடன் சேர்த்துக் கருதப்படாமல் இரண்டாந்தரப் பிரச்சி னைகளாகவும், விஷேட பிரச்சினைக ளாகவும் கருதப்படுவதுடன், இது சம்பந்தமான சட்டங்கள் அனைத்தும் ஆண்களாலேயே அமைக்கப்பட்டால், பெண்களின் பிரச்சினைகள் உண்மை யாக தீர்க்கப்படுமோ என்பது மிகுந்த ஐயத்துக்குரியதே.

மனித உரிமைச் சட்டங்களை எடுத்து நோக்கின் – உதாரணமாக சித்திர வதையை தடைசெய்யும் சட்டம் பின்வருமாறு கூறுகின்றது:– சித்திரவதை என்பது, அரசாங்க அதிகாரிகளினால் அல்லது உத்தியோக பூர்வமாக செயற்படுகின்ற ஒருவரால் அல்லது அவரின் உத்தரவின் பேரில் அல்லது ஒப்புதலுடன் இழைக்கப் படுகிற செயலாகும். ஆனால் பெரும்பாலும் பெண்கள் அனுபவிக் கின்ற சித்திரவதை பொது இடங்களில், அரசாங்க உத்தியோ கத்தராலோ எதிரிகளாலோ இழைக்கப் படுகிறது என்று மட்டும் கூற முடியாது. தனிப்பட்ட, சொந்த நபர்களால் தனி இடங்களில் நடைபெறுகின்றது. ஆகவே அவை ஐ.நா. சபையின் வரைவிலக் கணத்திற்குள் வரமாட்டா.

பொதுவாக மனைவியைக் கொல்லல், அடித்தல், கற்பழித்தல் ஆகிய வன்முறைகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனைகள் ஏனைய குற்றங் களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை களைவிடக் குறைவாகவே

www.tamilarangam.net

இருக்கின்றன. ஏனெனில் உலகரீதியாக இக் குற்றச்சாட்டுகள் எல்லாம் தனிப்பட்ட, அந்தரங்கமான விடயங்கள் என்றும், தேசிய குற்றவியல் வன்முறைக்கு அப்பாற்பட்டன என்றும் கருதப்படுகின்றன. ஆனால் பெண்களிற்கு நடைபெறும் வன்முறைகள் தவறான தனிப்பட்ட ஒரு நடத்தை என்று கருதப்படாமல் பெண்ணை அடிமைப்படுத்தல் என்ற அமைப்பின் பிரதிபலிப்பாகக் கண்டு கொள்ளப்பட்டால் இதனை ஒரு போதும் தனிப்பட்ட ஒரு விடயமாக ஓரப்படுத்த முடியாது. இந்த வன்முறைகள் ஆண்களிற்கும் பெண் களிற்கும் இடையேயுள்ள சமனற்ற அதிகாரத் தொடர்பினாலும், மேலாதிக் கத்தினாலும், ஆண்களுக்குரிய விஷேட உரிமைகளினாலும் ஏற்படுகின்றன. பெண்களை இரண்டாந் தர பிரஜையாக நடத்துவது இனரீதியான பாரபட் சத்தினளவு பாரதூரமான குற்றமே. எவ்வகையிலும் குறைந்ததல்ல.

வீட்டிலும் வேலை இடங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் பெண்கள் மீதான மேலாதிக்கத்தைத் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு வன்முறைகளும் முக்கியமாக பயன் படுத்தப்படுகின்றன. பெண்களிற்கு எதிரான வன்செயல்ள் ஒரு விஷேட வகையான தவறுகளாகக் கருதப்படு கின்றனவேயன்றி மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று கணிக் கப்படுவதில்லை.

இன்னொரு சட்டத்தில் – (Article 7) – பொது இடங்களில் வேலை செய்வோருக்கு நியாயமான வேலை வசதிகள் கொடுக்கப்படல் வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால் பெண்களின் பெரும்பாலான பொரு ளாதார நடவடிக்கைகள் வீட்டிலேயே அல்லது வீட்டை மையமாகக் கொண்டே நடைபெறுகின்றன. இத்தகைய வேலைகளுக்கு ஒரு வித பாதுகாப்பும் கொடுக்கப்படவில்லை. இதே சட்டம் ஆண்களிற்கும் பெண்களிற்கும் சமமான வேலைக்குச் சமமான சம்பளம் கொடுக்க வேண்டும் என்கிறது. ஆனால் உலகத்தில் எத்தனை வீதமான பெண்கள் சம்பளத்திற்கு வேலை செய்கிறார்கள்? சம்பளம் இல்லாமல் வீட்டிலும், வீட்டுத் தோட்டங்களிலும், குடும்ப வியாபாரங்களிலும், சில்லறைத் தொழில் களிலும் வேலை செய்யும் பல்லாயிரக் கணக்கான பெண்களிற்கு ஒருவித பாதுகாப்பும் இல்லை.

இறுதியில் மனித உரிமைச் சட்டங்கள் கலாசார சமய உரிமைகளை நிலைநாட்டுவதில் அதிகம் கவனம் செலுத்தியுள்ளன. ஆனால் பல இடங்களில் சமயம், கலாசாரம் என்ற பெயரில் பெண்கள் அடக்கப் படுகிறார்கள், இம்சிக்கப்படுகிறார்கள். உ+ம்:– பல இஸ்லாமிய நாடுகளில் தனிப்பட்ட சட்டங்களின் அடிப் படையில் (Personal Laws) மின் அடிப்படையில் கலாசார, சமய கோட்பாடுகள் பேணப்படுகின்றன. இந்தியாவில், இஸ்லாமிய குடும்பத்தில் ஆண்களிற்கு கொடுக்கப்படும் சொத்தில் சரிபாதியே பெண்களுக்குக் கொடுக்கப்படும். கோட்டிற்குப் போகாமல் மும்முறை “தலாக்” என்று உச்சரித்து ஒரு ஆண்மகன் விவாகரத்துச் செய்யலாம். அரேபியாவில் முகம் முழுவதையும் மூடும் உடை அணிந்திராத எந்தப் பெண்ணையும் தண்டிக்கலாம். ஆபிரிக்காவின் பல இடங்களில் இஸ்லாமியரிடையே பெண் உறுப்புகளைச் சிதைப்பது சர்வ

www.tamilarangam.net

சாதாரணமாக நடைபெறும்.... இப்படிப் பல.

இவை எல்லாம் பெண்களிற்கு எதிரான கொடுமைகள் என எமக்குத் தெரிந்த போதிலும் கலாசாரத்தின் பேரில் அந்தந்த நாடுகளில் அனுமதிக்கப்படலாம் என சர்வதேசப் பாரபட்சப் பிரகடனம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த அநியாயம் நீங்குவதற்கு கலாசாரம் என்கிற திரையைக் கிழித்து மனித உரிமை மீறல்களை நோக்கும் தெளிவும் துணிவும் வேண்டும்.

எனக்குள்ளே ஒரு குண்டு

சமீபத்திலே என்னுடைய நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். மெல்பெணில் வரவிருக்கும் கசீனோ (சூதுக்களரி) எப்ப வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறாராம். முன்பொருநாள் சிட்னிக்குப் போய் சூதாடியபோது ஆயிரம் டொலருக்கு மேல் வெற்றியாம். அன்று இராமுழுவதும் களரியில் நண்பர்களோடு செலவழித்துவிட்டுக் காலையில் வீடு வந்தபோது, மிகுந்த ஆத்திரத்துடன் இருந்த மனைவியின் முன்னால் இரண்டு பொக்கெற்றுக்குள்ளிருந்தும் காசை விட்டெறிந்து அவளை மகிழ்வித்ததாகச் சொன்னார். மனைவியின் முகத்தில் அப்ப ஏற்பட்ட மலர்ச்சியைப் பற்றிச் சொல்லும் போது இவரது கண்ணும் வாயும் இப்பவும் பளிச்சிட்டன.

கசீனோக்காரர்கள் பெருந் தொகையாய் இதில் பணம் பண்ணுகிறார்களாமே, இதைத் தொட்ட எல்லோரும் பொருளை இழந்து போகிறார்களாமே என்று நான் கேட்டதற்கு, அது பெரும்பாலும் உண்மைதான். மற்றவர்களுக்கு எப்படியென்றாலும், எனக்கு இப்படி என்று புன்சிரிப்புடன் சொன்னார்.

இது கொஞ்சம் அமிதமான மோட்டுத்தனம் போலத் தோன்றினாலும், மற்றவர்களிடத்தில் இல்லாத ஏதோ சிறப்பு எங்களிடம் இருக்கிறது என்று நினைக்கிற சுபாவம் மிகவும் பரவலானது. இது பிழையென்று தெரிபவர்களும் எப்பொழுதும் இதைப் பூரணமாய் உணர்வதில்லை. “காக்காய்க்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு” என்கிற வாக்கு எங்களுக்கு எங்கள் பிள்ளைகளிடத்திலே இருக்கிற அபரிமிதமான அன்பைப் பற்றியது மட்டுமல்ல. எல்லாப்

www.tamilarangam.net

பிள்ளைகளுக்கும் நடப்பதுதான் எங்கள் பிள்ளைகளுக்கும் நடக்கும் என்பதையும் இது நினைவூட்டுகிறது.

"நெருநல் உளன் ஒருவன் இன்றிலை எனும் பெருபடைத்து இவ்வுலகு" என்கிற குறள் எல்லோருடைய விதியுமே எம்முடையதும் என நினைவூட்டுவதன் மூலம் நாம் தற்காலிக அதிதிகளாயிருக்கும் இவ்வுலகின் சிறப்பைப் பாராட்டுகிறது. எத்தனை காதல்கள் இத்தரை மீதினில் நித்தம் மலர்கின்றன, மடிகின்றன என்பதைச் சூரியன் மீதும் சந்திரன் மீதும் சபதங்கள் செய்கின்ற கதாநாயகர்களும் இளையோரும் மறந்துவிடுவது இயல்பானதே.

நண்பரோடு பேசுகையில் இவற்றைப் பற்றிச் சிந்திக்கிறபோது, எனக்கு மிகவும் பிடித்த ஒழு பழைய யப்பானிய கதையொன்று நினைவுக்கு வந்தது. *'எழுத்து'* இல் பல ஆண்டுகளுக்கு முன்னர் இது மொழிபெயர்ப்பில் வந்ததென நினைக்கின்றேன். வேறு பத்திரிகையாயும் இருக்கலாம். கனகாலம் போய்விட்டது. நான் ரசித்ததை உங்களோடு பகிர்கின்றேன்.

(ற்)ரோக்கியோவில் வாழ்ந்த இளைஞன் ஒருவனுக்குத் தன்னுடைய வாழ்க்கையிலே சிறிது சிறிதாய்ப் பெரும் அலுப்புண்டாகியது. அவன் வேலைசெய்த கட்டிடத்திலோ (எண்ணற்ற அதே போன்ற கட்டிடங்களில் அதுவும் ஒன்று) அறுபது எழுபது தட்டுக்கள். அவை ஒவ்வொன்றிலும் இவன் வேலை செய்வது போன்ற காரியாலயங்கள். உள்ளே போனால் ஒரே நீளத்துக்கு வரிசையாய் மேசைகள். அவற்றின் முன்னால் பளிச்சென்று மினுக்கிய முகங்களோடு ஆர்வத்துடன் வேலை செய்யும் யுவதிகளும் இவனைப் போன்ற யுவர்களும். கம்பெனி கொடுத்த சீருடையில்லாத இடங்களிலும் பெரிய வித்தியாசம் எதுவும் இல்லை. இப்ப பிரபலமான பாணியில் வெட்டிய உடுப்புக்கள்தான். எல்லோரும் நேரம் வர கைப்பையைத் திறந்து மத்தியானச் சாப்பாட்டை அதே பிளாஸ்ரிக் பெட்டியிலிருந்து எடுத்து மென்று தின்று, மூடிவைத்துப் பிறகு மீண்டும் வேலை... அம்பட்டன் கடைக்கண்ணாடியில் தெரிவது போல வரிசைக்கு ஒரே பிரதி போல வேலைசெய்துவிட்டு, வெளிக்கிட்டு வீட்டுக்குப் போனால் அங்கே என்ன வாழ்ந்தது?

வரிசையாய் இருக்கிற அநேக கட்டிடங்களிலே ஒன்றில் இவன் வாழ்கிறான். இவன் முன்கதவைத் திறக்கிறபோதே இன்னும் பலர் தங்களுடைய கதவுகளைத் திறந்துகொண்டு உள்ளே போகிறார்கள். அதே அப்பாடா. சப்பாத்தைக் கழற்றி எறிந்துவிட்டு பாத்ரூமுக்குள் போகிறார்கள். பிளஷ் பண்ணுகிறார்கள்.

இந்தமாதிரி வாழ்வதிலே என்ன பயன்? பெரியவொரு இராட்சத யந்திரத்தின் பல்லாயிரக்கணக்கான சக்கரங்களின் பற்களில் தானும் ஒன்றுபோல இடையறாது சுழல்வதைத் தவிர இந்த வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் இருக்கிறது? ஆழமாய் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான்.

மறுநாள் வேலைக்குப் போகும் வழியிலே தனக்குத் தெரிந்த கடையொன்றிற்குப் போய் நண்பன் ஒருவனது செல்வாக்கைப்பயன்படுத்தி கைக்கடக்கமான ஒரு

www.tamilarangam.net

ஏறிகுண்டு வாங்கினான். ஒரு மாட்டுத் தாளில் சுற்றி நாடாவினால் ஒழுங்காய்க் கட்டித்தந்த பொட்டணத்தைத் தன்னுடைய கைப்பைக்குள் வைத்துக் கொண்டான். அன்றைய பத்திரிகை, குடை, சான்ட்விச் பெட்டி என்கிற சாமான்களைவிட இப்ப அவனுடைய பெட்டிக்குள்ளே ஒரு குண்டும் இருந்தது.

பஸ்சில் ஏறிக் காரியாலயத்துக்குப் போகும்போதும் சரி, பகுதித்தலைவனிடம் போய் நேரமாகியதைப்பற்றி அறிவிக்கிற மாமூலை முடித்தபோதும் சரி தன்னுடைய வாழ்க்கை முன்பு போல இல்லை என அவன் உணர்ந்தான். ஒருவர் பின் ஒருவராய் சாரிசாரியாய் பைல்களுக்குள்ளே தலையைப் பதித்துக் கொண்டிருந்த அந்த ஜந்துகளுக்கும் அவனுக்குமிடையே பெரியதோர் வேற்றுமை இப்ப - அவனுடைய கைப்பைக்குள்ளே ஒரு குண்டு இருக்கிறது. வேறொருவரிடமும் இல்லாத விசேடமான குண்டு எனக்குள்ளே என்று தெரிந்து கொண்டு மற்றவர்களையும் உலகத்தையும் பார்த்தபோது அவனுடைய வாழ்க்கைக்குப் புதியதோர் அர்த்தம் உண்டாகியது. இப்படியாக சில நாள் இனிமையாய்க் கழிந்தன.

எந்தக் கனவைத்தான் அதிகநாள் நீடிக்கவிடுகிறது இந்த உலகம்?

அவனுடைய கட்டிடத்திற்குப் பின்னால் அவனோடு பஸ்சில் இறங்கிய சாதாரணங்களில் ஒன்றை மோட்டார் சைக்கிள் ஒன்று தட்டிவிட்டது. பலமான அடி. சுற்றிவர நின்ற கூட்டத்திலிருந்து ஓரிருவர் செயற்பட ஆரம்பித்தார்கள். சரியாய் இவனுடைய வயதுதான் இருக்கும். அதே வகிடு, அதே மாதிரிக் கழுத்துப் பட்டி, சட்டை கைப்பை எல்லாம். மூச்சு வந்துகொண்டிருக்கிறது. சட்டைப் பையில் அடையாளம் எதுவுமில்லை. கைப்பையை பலவந்தமாகத் திறப்பதைவிட வேறு வழியில்லை என்று அப்படியே செய்தார்கள்.

மற்றவர்கள் உள்ளே ஒட்டியிருந்த பேப்பரை வாசிப்பதற்குள் இவனுடைய தலை சுழன்றது.

அதே கைப்பை. அதற்குள்ளேயும் அதே பிளாஸ்ரிக் பெட்டி, அதே குடை, அதே நாடாவில் சுற்றிய அதே பொட்டணம்.

- செ. வே. கா

எஸ். பொ. வின்
'மகாவம்ச'
இந்த இதழில்
இடம்பெற முடியவில்லை

க. கலாமோகனின்
தெரு
சிறுகதை அடுத்த
இதழில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆஸ்திரேலியா
ஒரு இறைவன் தோட்டம்

வஸந்த காலங்களில்
சிட்னியின் முகம்
சீக்கிரமே சிவந்து விடுகிறது

தரையெங்கும்
குழந்தை விரல்களாய்
பூக்களின் குலுங்கல்கள்
ஒளிநூல் சேர்த்துக் கட்டிய
கோடி வண்ண நிறங்கள்

தெய்வம் தொட்டது போல்
பூமியெங்கும் சிலுசிலுப்பு
நீண்ட மரங்களின் முனைகளை
சிவப்பாக்கும் அக்கினிப்பூக்கள்

ஆனாலும்
தெருவெல்லாம் வாயடைத்து நிற்கும்
அலங்கார வீடுகள்
காற்றில் ஏன் இந்த
மௌனப் புழுக்கம்?

அதிர்வுகளை இழந்தன
செவிப்பறைகள்
ஒலியின் துளிக்கு ஏங்கும்
உபயோகம் மறந்த என் ஜவ்வுகள்

அம்பு தெறித்த தென
உச்சி மரங்கள் உதறி
விண்ணெனப் பாயும்
சில வெண்பறவைக் கூட்டங்கள்

இரணியன் குடலாய்
மௌனத்தை கத்தரித்துப் போகும்
தம் ஈட்டிக் குரலால்

ஓரங்களில் உயரமான
தோழமையுடன் தோளுராய்ந்து
காலம் தாண்டி வானம் படிக்கும்
காட்டு மரங்கள்

அந்த மகோன்னத நிழலில்
பச்சைப்புல் விரிப்பில்
ஆச்சரியக் குறிகளாய்
அண்ணாந்து நிற்கும்
மனிதக் குடும்பங்கள்
இயற்கையின் உயரத்தை இன்னும்
அளந்து கொண்டிருக்கின்றன.

எஸ். வைதீஸ்வரன்
தமிழ்நாடு.



www.tamilarangam.net

நீங்காத நினைவுகள்

யாழ் பல்கலைக்கழகமும் பேராசிரியர் துரைராசா அவர்களும்

யாழ் வளாகத்தின் ஆரம்பமும், பின்னர் அது பல்கலைக்கழகமாக மலர்ந்த நிகழ்வுகளும், அங்கு மாணவனாகவும், விரிவுரையாளராகவும், நூலகராகவும் வாழ்ந்த நினைவுகளை மீட்டும்போது கண்கள் குளமாகிவிடுகின்றன. அன்று வரண்டுபோய் இருந்த அதன் ஆரம்ப காலகட்டத்தில் யாழ் வளாகம் என்றால் ஏனைய புகழ்பூத்த, வளம் படைத்த பல்கலைக்கழகங்களில் பயின்றவர்களுக்கும் பயிற்றுவித்தவர்களுக்கும் ஒரு கேலிக்கூத்தாகவே காட்சி அளித்தது. ஆனால் மறைந்த மாமேதை பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் இந்திரபாலா போன்றோரின் அயரா உழைப்பினால் அது பல்துறைகளிலும் வளர்ந்து ஒரு முழுப் பல்கலைக் கழகமாக மலர்ந்தது. ஆயிரக்கணக்கில் மாணவர்கள் வந்து குவிந்தனர். அறிஞர்கள், மேதைகள் ஏனைய பல்கலைக்கழகங்களிலிருந்தும், பிறநாடுகளிலிருந்தும் முண்டி அடித்துக் கொண்டு வந்து சேர்ந்தனர். எல்லாவற்றுக்குமே கொடுமுடி வைத்தாற் போல் மறைந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களும் துணைவேந்தராக வந்து பதவி ஏற்றார்.

படகு போன்ற காரில் பொலிந்து, அமர்ந்து, புன்முறுவலுடன் துணைவேந்தர் அவர்கள் வீற்றிருக்க, யாழ் பல்கலைக்கழக பிரதான வாசலில் உள்ள காவலர்கள் பாரிய இரும்புக் கதவுகளைத் திறந்துநிற்க, துனைவெந்தரின் கார் ராமநாதன் மண்டபத்தின் முன்றலில் போய் அசைந்தாடி நிற்கும் காட்சி, சாரதி பெருமாள் கதவுகளைத் திறந்து கொள்ள, துணைவேந்தர் காரில் இருந்து இறங்கி, மெல்ல அடிவைத்து மாடியில் உள்ள தனது அலுவலகத்திற்குச் செல்லும் காட்சி, இருமருங்கும் மாணவர்களும் ஏனையவர்களும் பயபக்தியுடன் ராச மரியாதையோடு பார்த்து ரசிக்கும் காட்சி.... எம் கண்ணே பட்டுவிடும்போல் இருந்த கால கட்டம் அது.

www.tamilarangam.net

வருடங்கள் உருண்டன. பேராசிரியர்கள் செல்வநாயகம், கைலாசபதி போன்ற கல்விமான்களை, திறமைவாய்ந்த நிர்வாகிகளை யாழ் பல்கலைக் கழகம் இழக்கக்கூடாத வயதில் இழந்தது. தரப்படுத்தலால் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் விரக்தியின் விளிம்புக்குச் சென்றனர். தெற்கில் இனக்கலவரம் திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்டது. எவ்வளவு வேகத்தில் யாழ் பல்கலைக் கழகம் வளர்ந்ததோ, அதே அசுர வேகத்தில் வீழ்ச்சிப் பாதையை நோக்கி விரைந்து சென்றது. குருவிக் கூட்டில் கல் எறிந்த கதையாயிற்று யாழ் பல்கலைக்கழகம்.

முண்டியடித்துக் கொண்டு வந்த விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் செத்த மாட்டிலிருந்து உண்ணி கழண்டமாதிரி கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தி அயல்நாடுகளை நோக்கிப் படையெடுத்தனர். ஏன் கேவலம் நானும் கூடத்தான். இனக்கலவரத்தை மனிதாபிமான நோக்கில் நோக்கிய மேலைத்தேச நாடுகள் தம் கதவுகளை மெல்லத் திறந்துவிட்டன. எஞ்சியிருந்தவர்களும் சாவுக்குப் பயந்து அதனை சாதகமாக்கிக் கொண்டனர்.

நாட்டை நேசித்தவர்களால், மண்ணை மானசீகமாக நேசித்தவர்களால், மக்களை மனதார நேசித்தவர்களால், இளம் தலைமுறையினரைப்பற்றி கடுமையாக சிந்தித்தவர்களால் அந்த முடிவை எடுக்க முடியவில்லை. அந்தவகையில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களும் வணக்கத்துக்குரியவர். அவரும் மனம் உடைந்த வயோதிப நிலையில், இறுதியாய் விதியின் வசமாகிவிட்டார்.

வீழ்ச்சியின் விளிம்பில் யாழ் பல்கலைக்கழகம், இந்திய இலங்கை அரச இராணுவத்தினரின் கையில் தமிழர்களும் தமிழ்ப்பிரதேசங்களும். பாழடைந்த நிலையில் பெரும் சாலைகள், போக்குவரத்து – தொலைபேசி – தபாற்சேவை – மின்சாரம் – போன்றவற்றின் ஸ்தம்பிதம், திட்டமிடப்பட்ட மருத்துவ, பொருளாதாரத் தடை. எல்லாவற்றிற்கும் மேலாக கண்மூடித்தனமான குண்டுவீச்சு. மண் கிடங்குகளுக்குள் மக்களின் வாழ்க்கை. இந்த நிலையில்தான் பஞ்சுமெத்தையில் படுத்து, பசுந்தரையில் பவனிவரவேண்டிய அந்த மாமனிதர், துரைராசா அவர்கள் பாலைவனமாக்கப்பட்ட யாழ்ப்பாணத்துக்குச் சென்றார். யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பதவி ஏற்றார். சாவுக்குப் பயந்தோடி, அன்னியநாடுகளில் அடையாளம் அற்றவர்களாக வாழும் அத்தனை பேருக்கும் ஒரு சவாலாக ஆகினார். இந்தநிலையில் அங்கு எப்படி வாழ்வது என்று தமக்குத்தாமே சமாதானம் கூறும் சுயநலவாதக் கும்பல்களுக்கு ஒரு சவாலாக செயற்பட்டார். இலங்கையில் உள்ள அத்தனை பல்கலைக் கழகங்களும் பல்வேறு காரணங்களுக்காக ஒழுங்காக இயங்காமல் ஸ்தம்பிதம் அடைந்திருக்க, போர்காலச் சூழலிலும் யாழ் பல்கலைக் கழகத்தை செயல் இழக்கச் செய்யாது, மூடாது, தனது இறுதி நாள்வரை தொடர்ந்து நடாத்தி சாதனையும் படைத்தார்.

1988ம் ஆண்டு அக்டோபர் மாதம், லண்டனில் எனது பட்டப்படிப்பினை முடித்துவிட்டு, இலங்கை இந்திய ராணுவம், மற்றும் ஏனைய கெடுபிடிகளுக்கூடாக யாழ் பல்கலைக் கழகத்தை அடைந்தேன். வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது. குண்டுகளாலும், பீரங்கித் தாக்குதல்களாலும் பல்கலைக்கழகக் கட்டிடங்கள் சல்லடை போடப்பட்டு இருந்த நிலை. மனதை ஒருவாறு தேற்றிக் கொண்டு

www.tamilarangam.net

துணைவேந்தர் அவர்களைச் சந்திப்பதற்கு நேரத்தை நிர்ணயிக்கும் பொருட்டு அவரின் செயலாளரிடம் அனுமதி கோருவதற்காக வாசலில் காத்து நிற்கிறேன். மனம் படபடவென அடிக்கிறது. வேர்த்துக் கொட்டுகிறது. எப்படி துணைவேந்தரைச் சந்திப்பது? எப்படிக் கதைப்பது? கதைக்கக் கூடியவராக இருப்பார? என்று மனம் சஞ்சலப்படுகிறது. நல்ல வேளையாக செயலாளரும் வந்தார். ஏற்கனவே தெரிந்தவராகையால் நிலைமையை சுருக்கமாகக் கூறினேன். துணைவேந்தர் அறையிலிருந்து ஒரு மென்மையான அமைதியான குரல் கேட்கிறது. உள்ளே நுழைந்த செயலாளர் கணப்பொழுதில் திரும்பிவந்து நீர் இப்பொழுதே போய்ச் சந்திக்கலாம் என்றார்.

எனக்கு நம்பமுடியவில்லை. இதற்குமுன் அவரைச் சந்தித்ததுமில்லை. உள்ளே நுழைகின்றேன். எளிமையான தோற்றம், பரிவு கொண்ட பார்வை, அரைக்கைச் சேட்டு, கையில் பேனா... வாரும், இரும்,.. உம்முடைய கடிதங்கள் கிடைத்தன. வந்ததையிட்டுச் சந்தோசம். போய் வேலையை மீண்டும் உற்சாகமாய் ஆரம்பியும். – வாயடைத்துப் போய், பேச வக்கற்றவனாக வாளாதிருந்தேன். நாதளர்ந்து விட்டது. பேசமுயன்றேன் முடியவில்லை. பிரச்சினைகளைச் சொல்ல முயன்றேன். இதுவெல்லாம் சின்ன விடயம், நான் பார்க்கிறேன், நீர் போய் வேலையைச் செய்யும். தலை அசைத்தபடி, மறுத்துப் பேச முடியாமல், குற்ற உணர்வோடு ஒரு கள்ளனைப்போல் வெளியே வந்தேன். இவ்வளவு ஞாபக சக்தியா இந்த மனிதனுக்கு. இவ்வளவு சாதாரண மனிதனா? பிரச்சினைகளை எவ்வாறு சுலபமாக சாதுர்யமாகக் கையாள்கின்றார். தான் ஒரு திறமையான நிர்வாகி என்பதையும், மனிதனை மனிதனாக மதிக்கும் ஒரு மனிதாபிமானி என்பதையும் ஒரு நொடியில் காட்டிவிட்டாரே!

கடமை உணர்வு ஒருபுறம், குடும்ப பாசம், பாரம் மறுபுறம் சுயநலக்காரனாக, அர்த்தமற்றவனாக, கோழையாக, குற்ற உணர்வோடு அந்த நல்ல மனிதரை, தியாக சிந்தனை உள்ளவரை, அந்த மாமேதையை ஏமாற்றிவிட்டு, சொந்த மண்ணைவிட்டு என் உடன்பிறப்புக்களை விட்டு, என்னை ஆளாக்கிய பல்கலைக்கழகக் கடைமைகளை மறந்து விமானத்தில் ஏறிவிட்டேன்.

குற்ற உணர்வோடு, கடந்த வருடம் மனதைக் கல்லாக்கிக் கொண்டு எப்படியும் யாழ் பல்கலைக் கழகத்தில் போய் கொஞ்சக் காலத்திற்காவது வேலை செய்ய வேண்டும் என்ற முடிவுடன் மனைவி, பிள்ளைகளைப் பிரிந்து புறப்பட்டேன். காரணம் அந்த மாமனிதர், இங்கு என் துறைத் தலைவரோடு, எனது வருகை இச்சந்தர்ப்பத்தில் யாழ் பல்கலைக் கழகத்துக்குப் பிரயோசனமாக இருக்கும் என அறிவித்திருந்ததே. கிளிநொச்சி வரை சென்றேன். கிளாலி போக்குவரத்து தடைப்பட்டு இருந்தது. உடன்பிறப்புகளும் நண்பர்களும் தடைபோட்டனர். மனம் குழம்பிய நிலையில் இரண்டு நாட்கள் கிளிநொச்சியில் காத்துக் கிடந்தேன். துணைவேந்தர் கப்பலில் நிரந்தரமாகக் கொழும்பு போவதாக யாழ் பல்கலைக்கழக ஊழியர் ஒருவர்மூலம் அறிந்தேன்.

சங்கடமான நிலைமைகளினால் திரும்பி வரும் எண்ணத்துடன், மனதைக் கல்லாக்கிக் கொண்டு, மறுநாள் காலை எனது கிராமத்தில் இருந்து அதிகாலை

www.tamilarangam.net

புறப்பட்டு வவுனியாவில் உள்ள புலிகளின் தடைமுகாமில் பிரயாண அனுமதிக்காக வரிசையில் நிற்கிறேன். ஒரு கையில் கழற்றிய சப்பாத்து, மறுகையில் ஒரு அலுவலகப் பை, அதே அரைக்கைச் சேட்டு, அன்று பார்த்த அதே உருவம் தடை முகாமில் காத்து நிற்கிறது. ஒரு கணம் மலைத்துப் போய்விட்டேன். அன்று இரவு கிளாலி சேவை நடந்தபடியால் துணைவேந்தர் கிளாலியின் ஊடாகவே வந்திருக்கிறார். நம்ப முடியவில்லை. மெல்ல குற்ற உணர்வோடு அவரை அணுகினேன். அதே முகம், அதே புன்சிரிப்பு. என்ன வந்து விட்டீரோ? – தற்போதைய நிலைமைகளையும் அதனால் எடுத்த முடிவையும் தெரிவிக்கின்றேன். பரவாயில்லை, போயிற்று விரைவில் திரும்பிவாரும் என்றார் அதே புன்முறுவலுடன். அவரின் பதிலால் ஒருகணம் திகைத்து நிற்கையில், புலிகளின் தடைமுகாம் திறக்கும் மணி ஓசை எம்மைப் பிரிக்க, பிரிய மனமின்றி தலையை அசைத்து வரிசையை நோக்கி நகர்கின்றேன்.

வரிசையில் நின்றபடி கண் இமை வெட்டாமல் அவரையே பார்க்கின்றேன். ஏனைய பலகலைக்கழகத் துணைவேந்தர்களையும் மனக்கண்ணில் பார்க்கிறேன். என்ன அற்புதமான மனிதர். ஆயிரக்கணக்கான மக்களோடு மக்களாக நிக்கிறாரே! அதிகாரத்தின் உச்ச விளிம்பில் இருந்து கொண்டு ஒரு சாதாரண பிரஜையைப் போல் இப்படியும் அவரால் செயற்பட முடிகின்றதே! சகல விதிமுறைகளையும் சாதாரண ஒரு மனிதனைப் போல் ஏற்று, எதுவித சஞ்சலமும் சலசலப்பும் அற்று, புலிகளின் தடைமுகாம், அரசபடைகளின் தடைமுகாம்களில் மணிக்கணக்கில் காத்து நின்று, சேறு சகதிகளையும் தாண்டி மைல் கணக்கில் அந்த ஜீவன் நடந்து சென்று கொண்டிருந்தது.....!

மு. குணசிங்கம்

நான்காவது
பரிமாணம்
1565 Jane St, P.O. Box 34515
Toronto, Ontario,
Canada M9N 1RO

மௌனம்

6 Square du Roule
92200 Neuilly S/Seine,
France.

தமிழ் உலகம்
அவுஸ்திரேலியாவில் மாதம் இருமுறை வெளியாகும் புதினப் பத்திரிகை!
P.O Box 1639, Preston South, Australia 3072

www.tamilarangam.net

அவுஸ்திரேலியாவில் இந்து ஆலயங்கள்

இந்த ஆண்டு, அவுஸ்திரேலியா இரு இந்து ஆலயங்களின் விமரிசையான கும்பாபிஷேகங்களைக் கண்டுள்ளது. ஜனவரியில் சிட்னி ஸ்ரீ வெங்கடேஸ்வர ஆலயத்திலும், மே மாதத்தில் மெல்பனில் கரம் டவுன்ஸ் சிவா – விஷ்ணு ஆலயத்திலும் கும்பாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றன. கடந்த வருடம் மெல்பனில் வக்கிரதுண்ட விநாயகர் ஆலயத்திலும் கும்பாபிஷேகம் இனிதே நிகழ்ந்தது. இந்த ஆலயங்களை அமைப்பதில் உழைத்த எல்லோரும் பாராட்டுக்குரியவர்கள்.

இவ்வுலகில் மிகப் பெரும்பான்மையானோர் பிறப்பினால் ஒரு மதத்தைக் கைக்கொள்பவர்களே. இந்த வகையில் அவுஸ்திரேலியாவில் வாழும் இந்துக்களின் பிள்ளைகளும் இந்துக்களாகவே வளர்வர். வாழ்வர். இவர்களுக்கு இந்த ஆலயங்கள் பெறுதற்கரிய சொத்துக்களாக இருக்கும். பெருமையைத் தரும் அடையாளங்களாக இருக்கும். இன்றைய சந்ததியினராகிய நாம் எமது வருங்காலச் சந்ததியினருக்குக் கையளிக்கும் செல்வமாக இவ்வாலயங்களைக் கொள்ளலாம்.

இவ்வாலயங்களுக்கு வெளியேயும், ஆங்காங்கே கூட்டு வழிபாடுகளும், பஜனைகள், சமய வகுப்புகள் போன்றவை நாடெங்கிலும் நடைபெற்று வருவதை நாம் அவதானிக்கிறோம். இவையும் எந்த விதத்திலும் முக்கியத்துவத்தில் குறைந்தவை அல்ல.

எல்லாவற்றிலும் மேலாக, இந்து சமயம் போதிக்கும் நற்பண்புகள் இந்துக்களிடையே வளர வேண்டும். ஆணவம், பொறாமை, பூசல், கேடு விளைவித்தல் போன்ற தீக் குணங்கள் அகலவும், வாழ்வில் சாந்தி ஓங்கவும் ஆலயங்கள் துணை நிற்க வேண்டும். இதற்கு என்ன செய்யலாம்?

– சைவன்.

சக்தி
Boks 99, Oppsal,
0619 Oslo 6,
Norway

சமர்
87 Rue De Colombes,
92600 Asnieres Sur Seine
France

www.tamilarangam.net

நூல் அறிமுகம் (2)

பழையதும் புதியதும்

நூலாசிரியர் : கலாநிதி சி. மௌனகுரு
வெளியீடு : விபுலம் வெளியீடு, 7 ஞானப்பிரகாசம் சதுக்கம் மட்டக்களப்பு.

பாரம்பரியக் கலை வடிவமான கூத்து, அண்மைக் காலங்களில் தமிழர்களின் கவனத்தை மீண்டும் ஈர்த்து வந்துள்ளது. மௌனகுரு, கூத்துக் கலையில் மிக்க ஈடுபாடும் நேரடியான பரிச்சயமும் உள்ளவர். அரங்கில் அவரது ஆட்டம் பிரசித்தமானது. கூத்தைப் பற்றி ஆழமானதும் அகலமானதுமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டவர். அவர் அவ்வப்போது எழுதிய கூத்துப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பே "பழையதும் புதியதும்".

தமிழில் இத் துறை பற்றிய நல்ல ஆற்வுகளும் கட்டுரைகளும் குறைவு என்ற வகையில், இந் நூலுக்கு ஒரு படி அதிக முக்கியத்துவம் உண்டு. கிராம மக்களின் அடிமட்டத்துக்குச் சென்று சேகரித்த பல அரிய தகவல்களை, ஆய்வுக் கண்ணோட்டத்துடன் இந் நூல் முன்வைக்கிறது.

வரலாற்று ரீதியாகவும், சமகாலத் தளத்திலும் கூத்தினை ஆசிரியர் நோக்கியுள்ளார். இக் கலையின் பண்புகளையும், பல ஒப்பீடுகளையும் வெளிக்கொணரப் பெருமுயற்சி யெடுத்துள்ளார். நூலாசிரியர் மௌனகுரு இப்பொழுது இலங்கையில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைத் துறைத் தலைவராகப் பணிபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

~ ஆஸி வாசகன்.

www.tamilarangam.net

அட்டைப்பட முகங்கள்

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
(லண்டன்)

எத்தனையோ தரம் இப்படியான செய்திகளைக் கேட்டு மனம் கலங்கியிருந்தாலும் இன்றைய செய்தியின் பின்னிருப்பவர்கள் தனக்குத் தெரிந்தவர்கள் என்ற துயரம் வந்ததும் கண்களும் கலங்கின.

வெளியில் சரியான பனி பெய்து கொண்டிருந்தது. இன்றைக்கு வேலைக்குப் போக முடியாது. ரெயின் பிரயாணங்கள் பனி பெய்யும் காரணத்தால் தடை செய்யப்பட்டு எப்போது மீண்டும் தொடங்குமோ தெரியாது என்று டெலிவிஷனிற் சொன்னார்கள்.

அரவிந்தன் முகத்தைக் கைகளால் மூடிக்கொணடு அழுதான். யாழ்ப்பாணத்தில் இன்னுமொருதரம் குண்டுவீச்சு. தேவாலயம் அழிந்து விட்டது. இருபது முப்பது பேர் இறந்திருக்கலாம்.

இலங்கைப் பத்திரிகைச் செய்தி ஒன்றை வாசித்ததும் தான் ஒரு ஆண்மகள் என்பதையும் மறந்து அழவேண்டும் போலிருந்தது. தேவாலயத்துக்குப் பக்கத்திலிருந்த குடும்பத்தை அவனுக்குத் தெரியும். தேவசகாயம் மாஸ்ரரும் குடும்பமும் இறந்துபோன மனிதர்களில் ஒரு சிலராக இருக்கக்கூடாது என்று அவன் மனம் பிரார்த்தித்தது. அவனின் நினைவு தெரிந்த நாள்முதல் நெருங்கிப் பழகிய குடும்பம் அது.

கொஞ்ச தூரத்திலுள்ள தமிழ்க்கடையிற் போய்த் தமிழ்ப் பேப்பர் வாங்கிக் கொண்டு வந்திருந்தான். கடையில் நின்றவர் யாழ்ப்பாணத்துக் குண்டு வீச்சைப்பற்றித் துயரத்துடன் சொல்லிக் கொண்டிருந்தார்.

அரவிந்தனுக்குத் தேவசகாயம் குடும்பம் ஞாபகத்துக்கு வந்தது. ஞாபகங்கள் வேதனை தருகின்றன. இவனின் குடும்பமும் தங்களிடமுள்ள எல்லாவற்றையும் விற்று அரவிந்தனை வழியனுப்ப வந்த போது தேவசகாயத்தை வழியிற் கண்டான்.

ஆறு பிள்ளைகளுக்குத் தகப்பன் அவர். ஒரு காலத்தில் இவனுடைய மதிப்புக்குரிய ஆசிரியராக இருந்தவர். முதல் மூன்றும் பெண் குழந்தைகள்.

www.tamilarangam.net

எதிர்பாருங்கள்!
பாரதி பள்ளியின் **பாரதி சிறுவர் அரங்கம்**

இப்பொழுது முதற் பெண்ணுக்கே முப்பது வயதுக்குமேல் இருக்குமோ? அந்த மூத்த பெண் அரவிந்தனுக்கு நினைவு தெரிந்த நாள்முதல் ஒரு சோகத்துடனிருந்தாள்.

டெலிபோன் அடித்தது. தேவசகாயம் மாஸ்ரரின் குடும்பத்தின் நினைவு துண்டுபட்டது.

இயந்திரம் போல் கைகள் றிசீவரைத் தூக்கின. வெளியில் பனி கொட்ட நினைவில் துயர் கொட்டிக் கொண்டிருந்தது. அடுத்த பக்கத்தில் ஒரு தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியரின் குரல் மிக மிக உற்சாகமாகக் கேட்டது. அடுத்தவன் அவலத்தை ஆதாயமாக்கும் சில பத்திரிகை ஆசிரியர்களில் ஒருத்தர் அவர்.

"என்ன இண்டைக்கு வேலைக்குப் போகயில்லப் போல கிடக்கு"

"ஓம். சரியான பனி, ரெயின் சிக்னல் சேர்விஸ் பிழையாம். தேவையில்லாமல் பிரயாணம் செய்ய வேண்டாம் எண்டு ரெலிவிஷனில் சொல்லிச்சினம்"

"நீர் வீட்ட இருப்பீர் எண்டு நினைச்சன். சரியாப் போச்சு." ஆசிரியர் எதற்கோ அடித்தளம் போடப்போகிறார் என்பதையுணரத் தெரியாத வாலிபனில்லை அரவிந்தன்.

"பனி பெய்யிறபடியால் வேற ஒண்டும் செய்யத் தெரியல்ல"

"ஒவ்வீசுக்கு ஒருக்கா வாருமேன்" குரலில் உற்சாகம். சுடச் சுட விடயங்களை எழுதி வாசகர்களைப் பிடிக்கும் ஒரு ஆசிரியர் கூப்பிட்டார்.

அவர் குறிப்பிடும் ஒவ்வீஸ் 'அவர் வீடுதான்'. அங்கேயே பத்திரிகை வேலைகளைச் செய்து கொள்வார். அரசாங்கத்துக்குக் கணக்குக் காட்டும் போது, வீட்டுக் கடன் ஒவ்வீஸ் செலவு என்ற விதத்தில் மறைபடும். சம்பளமும் 'கிம்பளமும்' எடுத்துப் பணம் சேர்க்கும் பல தமிழர்களில் ஒருத்தர் அந்த ஆசிரியர். அவரின் அழைப்புக்கு இவன் தயங்கினான்.

ஒருதரம் இந்த மனுஷன் இருமும் போது எத்தனை ஆயிரம் கிருமிகள் மற்றவனுக்குப் போகிறது? எத்தனை தமிழன், தான் செய்யும் விடயங்கள் மற்றவர்களைத் தாக்கும் என்று நினைக்கிள்றான்.

"என்ன பேசாமலிருக்கிறீர்" ஆசிரியரின் குரல் கனத்தது.

அரவிந்தன் ஆசிரியரின் பத்திரிகைக்கு அட்டைப் படத்திற்குத் தேவையான புகைப் படங்களை எடுத்துக் கொடுப்பவன். லண்டனில் இப்பொழுது தமிழர் எதையும் சாட்டிக் கொண்டு பெரிய பார்ட்டிகள் வைப்பதும், வீடியோ, படங்கள் எடுப்பதும் சாதாரணம். லண்டன் முழுதும் பரதக் கலைகள், பாட்டுக் கச்சேரிகள், பூப்பு நீர் ஆட்டுவிழா, பிறந்த தினமென்று மிக மிக ஆடம்பரமாக நடக்கும்

www.tamilarangam.net

வைபவங்களுக்கும் அவனைக் கூப்பிடுவார்கள். ஆசிரியரின் மாமியார் பாட, மைத்துனி ஆட அடிக்கடி 'கலைவிழா'(?) நடக்கும். அதை அரவிந்தன் படமெடுக்க ஆசிரியர் அழகிய நிறத்தில் அந்தப் படங்களைப் பிரசுரிப்பார். பத்திரிகை விலைப்படும், காசு சேரும்.

இப்பொழுதும் அப்படி ஒன்றுக்குத்தான் கூப்பிடுகின்றார் என்று தெரிந்தது. இவன் இருக்கும் மனநிலையில் எந்த அழகையும் மனம் கொள்ளாது. 'தேவசகாயம்' குடும்பம் வேதனை தந்து கொண்டிருந்தது.

"கொஞ்சம் தடிமல் குணமாக இருக்கிறது" அரவிந்தன் பொய் சென்னான். ஆசிரியர் விடமாட்டார் என்று தெரியும். பத்திரிகை ஆசிரியர் சிலர் எதையும் எழுதி விற்றுப் பணமாக்கத் துடிப்பவர்கள்.

"பின்னேரம் ஒருதரம் வரப்பாரும். அட்டைப் படத்தைப் பற்றி உம்மோட கதைக்க வேணும்".

ஆசிரியருக்கு இவன் தடிமலைப் பற்றி என்ன அக்கறை. இவன் செய்யும் வேலைக்கு இவனுக்குச் சம்பளம் கிடைக்கிறது. இவன் போகாவிட்டால் ஆசிரியருக்கு உதவி செய்ய எத்தனையோ தமிழர்கள் இருக்கிறார்கள். 'கலை' தெரிகிறதோ இல்லையோ கமெரா பிடிக்க யாருக்குத் தெரியாது? எல்லோரும் தங்களை டேவிட் பெய்லி என்ற பிரபலமான புகைப்படக் கலைஞராகக் கற்பனை செய்வதற்கு என்ன தடை?

அரவிந்தன் 'சரி பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டுப் போனை வைத்தான்.

தன்னைச் சுற்றியிருக்கும் சுற்றாடலைப் பார்த்தான். மௌனம் தோய்ந்திருந்தது. வீடு மிக மிக அமைதியாக இருந்தது. இவனுடன் இன்னும் இரண்டு தமிழ் வாலிபர்கள் இந்த வீட்டிலிருக்கிறார்கள். இரண்டு படுக்கையறைகள், ஒரு ஹோல், குசினி, குளிப்பறை, ரொய்லெட் கொண்ட இந்த வீட்டில் இந்த மூவரும் வாழ்கிறார்கள்.

எல்லோரும் அகதிகள். அரசாங்க உதவிப் பணத்தை எடுத்து ஊருக்கு அனுப்பிவிட்டுத் தங்கள் சீவியத்துக்கு இரவு பகலாக உழைப்பாவர்கள்.

அரவிந்தன் ஒரு கடையில் எடுபிடி. தான் இந்தப் பனியில் வேலைக்கு வரமுடியவில்லை என்று போன் பண்ணியபோது கடைக்கார முதலாளி – ஒரு இந்திய குஜராத்தி – முனுமுனுத்தான். உங்களுக்கெல்லாம் அரசாங்க ஊழியர்கள் என்ற நினைவோ, கண்டபடி லீவு எடுக்கிறீங்கள்? குஜராத்தி ஒரு பிரசங்கம் செய்து முடித்தான்.

தேவாலயத்தில் குண்டுபோட்ட கதையை ஒரு சிநேகிதன் போன் பண்ணிச் சொல்லியிருந்தான். அந்த விளக்கத்தைப் படிக்கப் பத்திரிகை எடுத்துக் கொண்டு வந்தான். தமிழர்களின் இன அழிவு செய்தித் தொகுப்பாக மட்டும் தேய்ந்து போய்க் கொண்டிருக்கிறதா? பத்திரிகை எழுத்துக்கள் இவனுக்குத் தெரிந்தவர்களின் கண்ணீர்த் துளிகளை ஞாபகப் படுத்தின.

அந்த மாஸ்டரின் குடும்பம் எவ்வளவு அருமையான குடும்பம். இவன்

www.tamilarangam.net

யோசித்துக் கொண்டு குசினிக்குப் போனான்.

முன் அறையில் இருக்கும் வாலிபன் வழக்கம் போல் குனிந்த தலையுடன் பாணும் பருப்பும் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனின் பெயர் தர்மலிங்கம். ஒருத்தருடனும் ஒரு பேச்சு வார்த்தையும் வைத்துக் கொள்ள மாட்டான். அரசாங்கப் பணத்தை எடுத்துக் கொண்டுபோய்ச் சாப்பாட்டுச் சாமான்கள் வாங்கிக் கொண்டு வருவான், சமைப்பான், சாப்பிடுவான், நீண்ட நேரம் துாங்கிக் கொண்டிருப்பான். கதவைத் திறப்பதே அருமை. லண்டனுக்குத் தர்மலிங்கம் எப்போது வந்தான் என்று அரவிந்தனுக்கும் அந்த வீட்டிலிருக்கும் மற்ற வாலிபன் மூர்த்திக்கும் தெரியாது.

அரவிந்தன் லண்டனுக்கு வந்து மூன்று வருடங்களாகின்றது. அவன் வரும்போது அந்த வீட்டில் தர்மலிங்கம் குடியிருந்தான். அவனின் தாய் தகப்பன் 'ஷெல்' விழுந்து மரணமடைந்து விட்டதாகவும் நெருக்கமான உறவு என்று சொல்லிக் கொள்ள யாருமில்லை என்றும் மூர்த்தி சொல்லியிருந்தான். ஒரு விதத்தில் தேவசகாயம் குடும்பத்தை விட இவன் விதி பொல்லாதது. நடைப்பிணமாக வாழ்கிறான்.

தர்மலிங்கம் இவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அரவிந்தனைப் பொறுத்தவரையில் தர்மலிங்கம் ஒரு பரிதாபத்துக்குரியவன். மூர்த்தியைப் பொறுத்தவரையில் அவன் ஒரு பைத்தியம். பட்டங்களும் முத்திரை குத்தலும் ஒவ்வொருத்தரின் நோக்கத்தையும் பொறுத்தது.

அரவிந்தன் தேனீர் போட்டுக் கொண்டு முன்னால் உட்கார்ந்தான். யாருடனாவது பேச வேண்டும் போலிருந்தது.

"யாழ்ப்பாணத்தில் குண்டு போடுகினமாம்" அரவிந்தன் தர்மலிங்கத்தைப் பார்த்துச் சொன்னான்.

தர்மலிங்கத்தின் உடம்பு பெருத்துப் போய் அளவுக்கு மீறிய வயதைக் காட்டியது. கண்கள் யாரையும் நிமிர்ந்து பார்க்காதவை. உலகத்தில் எனக்குப் பார்க்கத் தேவையாக எதுவுமில்லை என்ற பாவமோ என்னவோ, நேரே பார்க்க மாட்டான். கசங்கிய சேர்ட்டும் சாறமும் போட்டிருந்தான். வாழவேண்டிய வாலிபம் தனிமையில் ஒடுங்கிய பரிதாபம்.

"எனக்குத் தெரிந்த ஒரு குடும்பமும் செத்துப் போயிருக்கும். தர்மலிங்கம் நிமிர்ந்து பார்க்கவேயில்லை. யாருக்காவது சொல்லியழ வேண்டும் என்ற தவிப்பில் அரவிந்தன் சொன்னான். சிரித்து மகிழ்ந்து இவன் வாழ்வின் இனிய நினைவாக இருந்தவர்கள் இன்று சரித்திரமாகி விட்டார்கள். வெளியில் சரியான பேய்க் காத்தும் பனியும். அதைவிடப் பெரிய சூறாவளி அரவிந்தன் இதயத்தில். தர்மலிங்கம் முகத்தைத் திருப்பி வானம் பிளந்து கொண்டிருக்கும் பனித் துளிகளை வெறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அந்தக் குடும்பத்தில் ஆறு குழந்தைகளும் தாய்தகப்பனும்...." அரவிந்தன் குரல் தழுதழுத்தது.

www.tamilarangam.net

சட்டென்று தேவசகாயத்தாரின் மகன் டானியல் ஞாபகத்திற்கு வந்தான். டானியல் மனித தர்மங்களுக்கு எதிராக நடக்கும் மிருகத்தனத்தை, நரபலிகளை வெறுத்தவன். பாதிரியாகப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தவன்! பரலோகம் போய்விட்டானா? டானியல், அரவிந்தனுடன் படித்தவன். அரசியல் மாற்றங்கள் இருவரையும் பிரித்து விட்டது. மூத்த மகள் இவன் வரும்போது மனம் திறந்து வாழ்த்தினாள். அவள் ஒரு முதுகன்னி. யாழ்ப்பாணத்தில் என்ன இருக்கிறது. மினி பஸ்களும் முதுகன்னிகளும் மூளை குழம்பிய ஒரு சமுதாயமுமா?



டானியலுக்கு இளையவள் ஸ்ரெல்லா! அவள் கண்கள் இவன் நினைவிற் குத்தின. ஸ்ரெல்லாவும் இறந்து விட்டிருப்பாளா? அரவிந்தன் தர்மலிங்கத்தைப் பார்த்தான். தாய் தகப்பன் ஷெல் விழுந்து இறந்தபின் இவன் உணர்ச்சிகளும் மரத்த விட்டதா? விடுதலை தேடி எழுந்த உணர்வில் நடந்த கொடுமைகளில் மனம் பேதலித்த இளைஞர்கள் எத்தனையோ?

"உனக்கு அக்கா தங்கச்சி யாருமில்லையா?". தர்மலிங்கம் குனிந்திருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அரவிந்தன் கேள்வி கேட்டான். தர்மலிங்கம் எழும்பிப் போய்விட்டான். அரவிந்தன் அவன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நடப்பதைப் பார்த்துப் பழகி, உணர்ச்சி மரத்துவிட்ட தமிழ்ச் சமுதாயத்தின் பிரதிநிதியா தர்மலிங்கம்?

தர்மம் சிறைப்பட்டு விட்டதோ? எப்போ விடுதலை?.

அரவிந்தன் தன்னை நிராகரித்து விட்டுப் போகும் தர்மலிங்கத்தைப் பார்த்தான். தர்மலிங்கம் இப்போது இலங்கையிலிருந்து வந்த பேப்பரைப் படித்திருப்பானோ? தேவசகாயம் குடும்பம் இவன் நினைவை நெருடினார்கள். ஸ்ரெல்லாவும் இறந்திருப்பாளா? திரும்பத் திரும்ப அந்தக் கேள்வி அரவிந்தனைத் துரத்தி வந்தது.

87ம் ஆண்டு இந்திய ராணுவம் யாழ்ப்பாணத்தைத் துவம்சம் செய்தபோது தப்பிய குடும்பங்களில் அரவிந்தன் குடும்பமும், தேவசகாயம் குடும்பமும் சிலவாகும். பழைய நினைவுகளை நினைத்தால் இதயம் எரிகிறது. அரவிந்தன் குளிக்க வெளிக்கிட்டான்.

வெளியில் கொட்டும் பனியை ரசித்துக் கொண்டு ஆவி பறக்கும் சுடுநீரில் அமிழ்ந்து கிடப்பது எத்தனை ரம்மியமான சுகத்தைத் தருகிறது? மனதில் வெடிக்கும் கொடிய வேதனையைச் சுடுநீர் தவிர்க்குமா?

டெலிபோன் அடித்தது. யாராக இருக்கும்? இன்று எத்தனையோ பேர் வேலைக்குப் போகார். ஆசிரியராக இருக்கக்கூடாது! ஆசிரியர் போன்றோருக்கு இப்படியான நிகழ்ச்சிகள் மிகவும் லாபம்

www.tamilarangam.net

தரக்கூடியது. நண்பன் ஒருத்தன்தான் போன் செய்தான்.

"என்னடா மச்சான். இந்த நாய்கள் ஊரில குண்டு போடுறான்களாம்." நண்பன் வினவினான்.

குளிப்பதற்காக பெனியனைக் கழட்டி விட்டதால் நெஞ்சு குளிர்ந்தது.

இவன் மறுமொழி சொல்லவில்லை. அரவிந்தனுக்கும் தேவசகாயம் மாஸ்ரர் குடும்பத்துக்கும் உள்ள நெருக்கம் நண்பனுக்குத் தெரியும். "எங்க குண்டு விழுந்ததெண்டு கேள்விப் பட்டிருப்பாய்" நண்பன் இவன் இதயத்தை ஈட்டியாற் குத்தினான். 'ஸ்டெல்லாவும் இறந்து விட்டாளா?' இவன் மனம் விட்டு அலறத் துடித்தான்.

"பாவம் மாஸ்ரரின்ர குடும்பம்." நண்பன் சொன்னான். இவன் மறுமொழி சொல்லவில்லை.

"அவரின்ர வீடு தரைமட்டமாம். குடம்பத்தில் அத்தனை பேரும்..." நண்பன் விம்மினான். அவனும் ஒரு காலத்தில் மாஸ்டரின் மாணவனாய் இருந்தவன்.

"ஏதோ வழியிருந்தபடியாத் தப்பினம். இல்லையெண்டா எங்கட கதியும் இப்படித்தானே" நண்பனின் குரலில் கடவுளுக்கு நன்றி. இந்திய ராணுவத்திடம் சூடுவாங்கி முடமாகியவன் அவன்.

அரவிந்தன் பார்வை கொட்டும் பனியை வெறித்துப் பார்த்தன. ஸ்ரெல்லா தேவலோகத்திலா? கண்ணீர் புரண்டன. வாழவேண்டிய தூய்மைகள் இலங்கை ராணுவத்தின் அழிவுக்குள் துவண்டு மடிகின்றனவே.

"உனக்கு மாஸ்டரின்ர பெட்டை ஒண்டுல கண்ணெல்லே?" நண்பன் கேட்டான். கேட்கக் கூடிய கேள்வியா இது? அரவிந்தன் பழைய நினைவுகளைப் பனியோடு சேர்த்துப் புதைத்துவிடத் துடித்தான்.

"பின்நேரம் வந்து பார்க்குறன் மச்சான் ... ஐயாம் சொறி..." நண்பன் சொல்ல வந்த எதையோ மென்று விழுங்கிறான். தன் பிரஜைகளைக் குண்டு போட்டு அழிக்கும் அரசாங்கம் இலங்கையை விட வேறெங்கும் இருக்க முடியுமா?

"நான் பேப்பர் ஒவ்வீசுக்கு ஒருக்காப் போகவேணும். பின்நேரம் எட்டு மணிக்கு வீட்ட இருப்பன்."

அரவிந்தன் போனை வைத்தான். கீழே தர்மலிங்கத்தின் அறைக் கதவு சாத்தப்படும் சத்தம் கேட்டது.

□□□

பத்திரிகை ஆசிரியர் சூட்டும் கோட்டும் போட்டிருந்தார். எங்கையோ புறப்பட்டுக் கொண்டிருந்தார் போலும். இவர்களெல்லாம் பெரிய மனிதர்கள். இலக்கியம் என்னவென்று தெரியாமல் இலக்கியக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பவர்கள். இந்தக் கிழமை வெளிவர வேண்டிய பத்திரிகையின் செய்திகளும் படங்களும் மேசையெங்கும் சிதறிக் கிடந்தன. மிகவும் சுவாரஸ்யமான விடயங்களும் கண்ணைக் கவரும் படங்களும் மேசையை நிரப்பின. இப்போதெல்லாம் வெளிநாடுகளில் தமிழ்ப் பத்திரிகைகள்

www.tamilarangam.net

வெளியிடுவது மிகவும் ஆதாயம் தரும் விடயமாகக் கணிக்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து அடிக்கடி சூடான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சித்தாந்த வரட்சியும் தனிநபர் அதிகாரமும் ஒரு பண்பட்ட கலாசாரத்தைக் குழிதோண்டிப் புதைக்கிறதே! அதிரடிகள், அதிகாரப் போட்டிகளுக்கான விசாரணைகள், மரணங்கள், கப்பம் வாங்கல்கள் எல்லாம் தாராளமாக நடக்கும் நாடு இலங்கையாகத்தான் இருக்கும். இவற்றிலிருந்து ஓடிவந்த நாங்கள் என்னதான் செய்து விட்டோம்? அரவிந்தன் சிந்தித்தபடி நடந்தான்.

லண்டனில் தமிழர்களுக்கு ஏற்றதாக எத்தனையோ விளம்பரங்கள் போடலாம். மணமகள், மணமகன் தேவைகள் என்று தொடங்கி அகால மரணங்கள் ஒன்றிரண்டு பக்கங்களை நிரப்புகின்றன. நண்டுக்கால், ஊரரிசி, கோழிக்கால், ஆட்டுக்கால், அரிசி மா, ஒடியல் என்பன இன்றும் சில பக்கங்களை நிரப்புகின்றன.

அரவிந்தனின் மனம் எதையோ நினைக்க, கைகள் பத்திரிகைச் செய்திகளைப் புரட்டிக் கொண்டிருந்தன. இந்தப் பத்திரிகை லண்டனில் நிறைய விலைபோகிறது. இந்த ஆசிரியர் சாதாரண காலங்களில் 'Nobody' யாக இருக்க வேண்டியவர் இப்பொழுது இலங்கையில் அரசியல் நிலைமைகள் அசாதாரணமாகி விட்டபடியால் 'Somebody' யாகி விட்டார்.

அரசியலிற் பிரமுகராகிவிட்ட கர்வம் சூட் பட்டன்களை அமுக்குவதிற் பிரதிபலிக்கிறது. அதிரடிகளும் ஷெல் தாக்குதல்களும் இல்லாவிட்டால் இவர் பத்திரிகை விலை போகாது. இலங்கையில் நிலைமை சாதாரணமாகி விட்டால் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டால் இவர் வியாபாரம் இங்கு நடக்காது!

ஆசிரியர் அரவிந்தனை நிமிர்ந்து பார்தத்தார். இவன் முகத்தில் ஈயாடவில்லை.

“என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்?...”

“யாழ்ப்பாணத்தில நிறையக் குண்டு போட்டவையாம்” இவனின் குரல் தழுதழுத்தது.

இந்திய ராணுவத்தின் ஷெல் அடிக்கு ஒன்றாய் ஓடிய இரண்டு நண்பர்கள் சிதறி அழிய இவன் மயிரிழையில் தப்பியவன்.

இலங்கை ராணுவத்தின் ஷெல் அடியில் இவன் முன் வீட்டிலிருந்த இளம் குழந்தைகளும் தாயும் தசைத் துணுக்குகளாய்த் தகர்ந்து மடிந்ததை இன்னும் பயங்கரக் கனவுகள் ஞாபகப் படுத்துகின்றன.

இவன் ஏதொ ஒரு நாளும் நடக்காத விடயமாகக் குண்டு போட்ட கதையைச் சொல்வதை ஆசிரியர் வியப்புடன் நோக்கினார்.

“யாழ்ப்பாணத்தில அடிக்கடி குண்டு போடுகினமாம்” ஆசிரியர் இழுத்துச் சொன்னார். அவர் முகத்தில் எந்தவித சோகமும் இல்லை. அவர் சொந்தக் காரர்களும் தெரிந்தவர்களும் உலகமெல்லாம் ஓடிவிட்டார்கள். தமிழ்ப் பகுதிகளில் ஷெல் அடிக்கு அழிபவர்கள் அதிகமாக ஏழைகளும் முதியவர்களும் தானே!

www.tamilarangam.net

"எனக்குத் தெரிந்த ஒரு குடும்பம்..." அரவிந்தன் வெட்கத்தைவிட்டு விம்மினான். இவனுக்குத் தெரிந்தவர்கள் என்று இவன் குறிப்படுபவர்கள் இப்போது புதைக்கப்பட்ட அல்லது சிதறிக் கிடக்கும் சரித்திரமாகி விட்டிருப்பார்கள். தமிழரின் இன்றைய அழுகையை நாளைய லாபமாக்கும் வியாபாரிகளில் ஒருத்தனாகிய இந்த ஆசிரியருக்கு இதிலென்ன அக்கறை.

அவர் நிமிர்ந்து உட்காந்தார். கண்களில் ஒரு பளபளப்பு. முகத்தில் ஒரு ஆர்வம். சோழியன் குடுமி சும்மா ஆடுமா? எதையோ சுரண்டுவதற்கான ஏற்பாடா?

"உனக்குத் தெரிந்த குடும்பம் என்றா சொன்னாய்?" ஆசிரியரின் குரலில் இனம் தெரியாத ஆவலை அரவிந்தன் கவனிக்கவில்லை. இவன் ஓம் என்று தலையாட்டினான்.

"அந்தக் குடும்பத்தில் உனக்கு நெருக்கமான யாருமுண்டா?" ஆசிரியர் தெளிவான குரலில் கேட்டார். இவன் ஆசிரியரின் கேள்வி விளங்காமல் யோசித்தான்.

"சிநேகித சிநேகிதி..." ஆசிரியரின் முகத்தில் நெழிந்த சிரிப்பை இவன் அவ்வளவாக விரும்பவில்லை.

"மாஸ்ரரின் மகன் டானியல் என்ர சினேகிதன்..." அரவிந்தன் மென்று விழுங்கினான். அதற்கப்பால் எதுவும் விளக்கமாகச் சொல்லுமளவுக்கு உறவு வளரவில்லையே.

"சிநேகிதனுக்குத் துக்கப் படுபவர்கள் கண்ணீர் விடமாட்டார்கள்" ஆசிரியர் தான் ஏதொ தத்துவத்தைச் சொன்னது போல் முகத்தைக் கர்வமாக வைத்துக் கொண்டார்.

'ஸ்ரெல்லா போன்ற பெண்கள் வாழவேண்டும்' இவன் இமயமலை ஏறிநின்று கதறவேண்டும் போற் துடித்தான்.

"அரபாத்தும் இஸ்ரேலியனும், ஐரிஸ்காரனும் ஆங்கில அரசாங்கமும், பொஸ்னியனும் சேர்பியனும் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க – மனித உரிமைகளைப் பாதுகாக்க ஒருத்தருடன் ஒருத்தர் பேசுகிறார்கள். ஏன் இலங்கையில் அப்படி ஒரு மாற்றமும் வரக்கூடாது? ஏன் அரசியல் வாதிகள் பேசப் பழகக்கூடாது."

அரவிந்தன் தான் கேட்பது குழந்தைத் தனமோ என்றுகூட யோசித்தான். ஸ்ரெல்லா போன்ற பெண்கள் அழியத்தான் வேண்டுமா? ஆசிரியரின் கவனம் இவன் முகத்தில். இவனுனைய கேள்விக்கு மறுமொழி சொல்ல முடியாத 'பெரிய' மனிதர் அவர்!.

"மாஸ்ரரின்ர பெட்டையின்ர படம் உன்னிடம் இருக்கா?"

இவன் திடுக்கிட்டுப் பார்த்தான். இலங்கைப் பிரச்சினையில் சுகமாக – மரியாதையாக வாழ்பவர்கள் இந்த ஆசிரியர் போன்றவர்கள்.

"காதலி செத்திருக்காவிட்டால் இப்படிக் கண்ணீர் வடிக்க மாட்டாயே... நல்ல

www.tamilarangam.net

தலையங்கம். 'புகைப்படக் கலைஞரின் காதலி குண்டடிபட்டு மரணம்' — எப்படி இருக்கிறது. ஆசிரியர் தன் மேதாவித் தனத்தில் தானே பெருமை கொண்டு சிரித்தார். இவன் திடுக்கிட்டான். புனித உயிரின் மறைவை எப்படியெல்லாம் பாவிக்கிறார்கள்?

"புகைப்படம் இருந்தால் அட்டைப் படம் போடலாம்." ஆசிரியர் எழுந்தார். அரவிந்தன் சிலையாக இருந்தான்.

□□□□□□□□□□□□□□□□□□□□□□□

[லண்டனில் வதியும் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் இதுவரை 5 நாவல்களையும் பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். பெண் உரிமை, சீதன ஒழிப்பு, சாதி ஒழிப்பு ஆகியவற்றுக்காகக் குரல் கொடுப்பவர். சுதந்திர இலக்கிய விழாவினரின் 1992ம் ஆண்டுக்கான சிறந்த நாவலாக, இவரது தேம்ஸ் நதிக்கரையில் என்னும் நாவல் தெரிவுசெய்யப்பட்டுள்ளது]

பாரதி பள்ளியிலிருந்து....

ஜூலை 2ம் திகதி. பெற்றோரும் உறவினர்களும் நண்பர்களும் பாரதி பள்ளிக்குத் திரண்டு வந்திருந்தனர்.

வளர்ந்தோர் வகுப்பு மாணவி, தாமே எழுதித் தயாரித்து வரவேற்புரை வழங்கினார். புதியனவும் பழையனவுமான பல பாடல்களைப் பிள்ளைகள் சுவைத்துப் பாடினர். பண்ணிசையும் பாரதி பாடலும் ஒலித்தன. நாடக வகுப்பு மாணவர்களால் — ஆசிரியரின் குறைந்தளவு உதவியுடன் — தயாரிக்கப்பட்ட தமிழ், ஆங்கில நாடகங்கள் எல்லோரையும் கவர்ந்தன.

பிள்ளைகள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். வாய்கள் ஆடவில்லை. பூரணமான லயிப்பு. இதுவே இந்த நிகழ்ச்சி தந்த அன்பளிப்பு.

பாரதி பள்ளி ஆரம்பமாகி 4 மாதங்கள் தான் ஆகியிருக்கின்றன. ஆங்கிலத்தில் அமிழ்ந்து வாழும் இந்தச் சூழலிலும் பிள்ளைகள் தமிழைக் கிரகிக்கும் வேகம் பிரமிப்பையே தருகிறது. இதுவே கற்பிப்போரை மகிழ்விக்கும் உந்து சக்தியாகவும் இருக்கிறது. வயதிற் சிறியவர்கள் மட்டுமின்றி, வளர்ந்தவர்களும் — வேலைக்கோ, பணத்திற்கோ உபயோகம் அற்ற இந்த மொழியை — தமது மொழியென விரும்பிக் கற்கின்றனர்.

ஆனால் ஒன்று. தமிழ்க் கல்வி அர்த்தமுள்ளதாகவும், தாக்கத்தையும், பெறுபேற்றையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டுமானால் எமது சமூகத்தில் மிகப் பெரும்பான்மையான பிள்ளைகள் இதில் நாட்டம் கொள்ள வேண்டும்.

இந்நிலை இப்பொழுது இல்லை. ஏற்கனவே மெல்பனில் பல தமிழ்ப் பாடசாலைகள் ஊக்கமாக இயங்குதல் மகிழ்ச்சிக்குரியது. இது மேலும் முன்னெடுக்கப்பட்டு, இன்னும் பல பாடசாலைகள் புதிய இடங்களில் தோன்றி இயங்குவது நன்மையையே தரும்.

— மாவை நித்தியானந்தன்.

www.tamilarangam.net

KEP TRAVEL SERVICES

Leading Travel Agency in Melbourne

Travel Services,
Freight Forwarding (Air / Sea)
& Insurence

Lowest Air Fares Guaranteed

To get best advice please contact

Raffia / Junita
on 667 0287 / 667 0276
or
R. Sivanathan on 748 9175 (A/H)

Melbourne Central Executive Suites
222 La Trobe Street,
Melbourne 3000

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

WITH THE BEST COMPLIMENTS FROM

Ravi, James & Associates
Barristers & Solicitors

Approved Migration Agent by the Dept. of Immigration
REGD. No. 55383

All legal work including ...

FAMILY LAW
IMMIGRATION
PERSONAL INJURIES

WORK CARE
GENERAL / COMMERCIAL LITIGATION
CONVEYANCING

SALES / PURCHASE BUSINESS
LEASE, WILLS AND PROBATE
INSURANCE & FINANCIAL SERVICES

The expertise to help you with all
your legal, insurance and financial needs

Telephone : 388 2091 Fax : 388 2092

558 Sydney Road,
Brunswick, Vic 3056,
AUSTRALIA

Contact : S. Raveendran - 497 3738 A/H

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்